பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 13 செவ்வாய்க்கிழமை (28.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 32

# 15,000 பேர் சாவு!

## கிடந்து அழுகும் சடலங்களால் சுகாதாரப் பாதிப்பு;

## போதிய நிவாரண உதவிகள் இன்றி மக்கள் அவதி

கொழும்பு,டிசெம்பர் 28

**நாட்டின் கரையோரப் பிரதேசத்தில் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்திய சுனாமி கடற்கொந்தளிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தை எட்டிவிடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நேற்றிரவு வரை 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்குக் கரையோரப் பிரதேசங்களில் மட்டும் 7 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.**

பலியானவர்களின் நூற்றுக்கணக்கான சடலங்கள் இன்னும் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. பல்வேறு இடங்களில் அநாதரவான நிலையில் கிடக்கும் சடலங்கள் பல அழுகி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. அவற்றை மீட்டு அடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தும் நடந்தன. மீட்கப்படாது கிடந்து அழுகும் சடலங்களால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் காணப்படுகின்றது.

பல ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். பல லட்சக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து தவிக்கிறார்கள். பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் அவர்கள் தஞ்சமடைந்துள்ளார்கள். அவர்களுக்கு அவசர நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன.

பேரழிவை ஏற்படுத்திய சுனாமியின் தாக்கம் இன்னும் அடங்கியபாடாக இல்லை. மீண்டும் ஒருமுறை இந்திய, இலங்கைக் கரையோரப் பிரதேசத்தை அது தாக்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று இந்திய புவியியல்

(16ஆம் பக்கம் பார்க்க)



இவர்கள்தாம் செய்த தவறுதான் என்னே?

## சடலங்களை மீட்பதில் கிழக்கில் அவல நிலை

ஏறாவூர்,டிசெ.28

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கடல் பெருக்கத்தினால் இப்பிரதேசம் தொடர்ந்தும் மயான பூமியாகக் காட்சியளிக்கின்றது. நேற்று திங்கட்கிழமையும் ஆயிரக்கணக்கான சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் அனைத்து வைத்தியசாலைகளும் மனித சடலங்களாலும் காயமடைந்த மக்களாலும் நிரம்பி வழிகின்றன.

மீட்கப்பட்ட சடலங்களை அடக்கம் செய்ய முடியாத அளவுக்கு கரையோரப் பிரதேசங்களில் நீர் தேங்கிநிற்பதால் சடலங்களை அடக்கம் செய்வதிலும் பாரிய சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன். இதனால் சடலங்கள் மேட்டு நிலப்பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரத்திற்கு மேற்பட்ட சடலங்கள் புகைப்படம் எடுத்த பின் புதைப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.28

மருதங்கேணியில் தொடர்ந்து சடலங்கள் மீட்கப்படுகின்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட அழுகிய உடலங்கள் உரிமை கோர உறவினர்கள் இல்லாத நிலையில் நேற்று புகைப்படம் எடுக்கப்பட்ட பின் தரவைகளில் புதைக்கப்பட்டன.

மருதங்கேணிப் பகுதியில் தங்கியிருக்கும் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் இத்தகவலை நேற்று இரவு உதயனுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

மருதங்கேணியில் கண்ணிவெடிகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பகுதிகளுக்குள் ஏராளமான சடலங்கள் இருப்பதால் மீட்புப் பணிகளும், சடலங்களின் எண்ணிக்கையை மதிப்பிடும் பணிகளும் தாமதமடைவதாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

மருதங்கேணி நிலைமை பற்றி அரச அதிபர் தெரிவித்திருப்பதாவது:-

கடலோரங்கள், மண்குவியல்கள், கட்டட இடிபாடுகள், பற்றைகள், புதர்கள், காடுகள் எங்கும் சடலங்கள் சிக்குண்டு கிடக்கின்றன. கடலில் இருந்தும் ஏராளமான சடலங்கள் வந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக்கு இன்று உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.28

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் கடற்பெருக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென யாழ்.குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட பொருள்கள் இன்று சம்பந்தப்பட்ட இடங்களுக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளன.

பொதுஅமைப்புகள், தேசிய எழுச்சிப் பேரவை,

(16ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்தோரின் எண்ணிக்கை முல்லையில் 1,600 என மதிப்பீடு

பரந்தன்,டிசெ.28

முல்லைத்தீவு கரையோர மாவட்டங்களில் கடல் கொந்தளிப்பால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 600 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 683 பேரின் சடலங்கள் நேற்று நண்பகல் வரை மீட்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் சின்னவன் நேற்று மாலை இதனைத் தெரிவித்தார்.

கடல் அலையில் அள்ளுண்டு காணாமற் போனவர்களின் உறவினர்கள் தந்த தகவலின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு இன்று குழு

கடற்பெருக்கத்தினால் வன்னிப் பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களை நேரில் கண்டறிவதற்கென கொழும்பில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தூதரகங்களின் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று இன்று கிளிநொச்சி வரவுள்ளது.

இந்தக் குழுவினர் அனர்த்தத்தினால் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்த இடங்களை நேரில் சென்று பார்வையிடுவர். (எ)

## கடல் மட்டம் ஏறுவதால் முல்லையில் பதற்றம்!

முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கரையோரப் பகுதியில் கடலலை தொடர்ந்து மேவி வருவதையடுத்து அந்தப் பிரதேச மக்கள் பதற்றத்துடன் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு கடற்பகுதியில் நேற்றுப் பிற்பகல் மீண்டும் கடலலை மேவிக் கிராமத்துக்குள் புகுந்தது. இதனால், அந்தப் பகுதியில் நடந்த மீட்புப் பணிகள் நிறுத்தப்பட்டன.

தமது உறவுகளைத் தேடிச் சென்ற பொது மக்கள் ஓடோடிப் பாதுகாப்புத் தேடினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை

கொழும்பு,டிசெ.28

கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கடல் அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களில் நேற்று மாலை வரை சுமார் 11 ஆயிரத்து 300 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| அம்பாறை | 5,726 |
| யாழ்ப்பாணம் | 2,070 |
| திருகோணமலை | 864 |
| மட்டக்களப்பு | 800 |
| காலி | 500 |
| முல்லைத்தீவு | 683 |
| மாத்தறை | 250 |
| அம்பாந்தோட்டை | 241 |
| களுத்துறை | 80 |
| கொழும்பு | 68 |
| புத்தளம் | 04. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செம்பியன்பற்று, உடுத்துறைப் பகுதிகளில் கடல் பூகம்பம் தாக்கியழித்த பிரதேசங்களுக்குச் சென்று மீட்புப் பணிகளைப் பார்வையிட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், போராளிகளுடனும் மீட்புப் பணியாளர்களுடனும் உரையாடுகின்றார். *(படம் : சிறி டிஜிற்றல் கலர் லாப்)*

# உயிரிழந்த மற்றொரு தொகுதியினரின் பெயர்கள்

வடமராட்சி,டிசெ.28

நேற்றுமுன்தினம் கடற்கொந்தளிப்பினால் உயிரிழந்து மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட சடலங்களில் நேற்று திங்கட் கிழமை உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட சடலங்களின் விவரம் வருமாறு:-

சிவப்பிரகாசம் சிவானந்தம்(வயது 65, கெருடாவில்), பாலேந்திரராசா வசந்தராஜா (வயது 18, கெருடாவில்), அந்திரஸ் ஆரோக்கியநாதன் எட்வேட்(வயது40, கெருடாவில்), ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் சந்தியசீலன் (வயது 31, மணற்காடு), நவரட்ணம் றொன்சிகா(வயது 12, தும்பளை கிழக்கு), வரப்பிரகாசம் பிரான்சிஸ் அம்மா(வயது 57, மணற்காடு), வடிவேலு நவரத்தினம்(வயது 58, இன்பருட்டி), வின்சன் இராசகுமார் மேரி ரொக்சனா(வயது 3, இன்பருட்டி), குணரத்தினம் சரசுவதி(வயது 75, தும்பளை கிழக்கு), சின்னத்தாயி மீனாட்சி(வயது 80, தும்பளை கிழக்கு), கண்ணதாசன் நிதர்சன் (வயது 10, தும்பளை), அகிலதாசன் இந்துதாஸ்(வயது 38, தும்பளை), வர்ணகுலசிங்கம் ஜெயந்தி(வயது 42, மணற்காடு), வர்ணகுலசிங்கம் ஜெலீனா (வயது 6, மணற்காடு), யாகப்பு மேரிமரினா( வயது 22, மணற்காடு), மரியாம்பிள்ளை மேரிமன்னா (வயது 22, மணற்காடு), மரியாம்பிள்ளை மாரியப்புலோனா (வயது 48, மணற்காடு), ஆரோக்கியநாதன் எட்வேட் (வயது 37, மணற்காடு), எட்வேட் சாதுரியா(வயது 2, மணற்காடு, எட்வேட் பேசியம்மா(வயது 37, மணற்காடு, சுனேந்திரன் சுகிந்தன்(வயது 2, தும்பளை), நீக்கிலஸ் அந்தோனி உதயசீலி (வயது 10, மணற்காடு), அடைக்கலம் ஜோர்ஜ் (வயது 34, மணற்காடு), யோசப் பெர்னாண்டோ சிந்துஜா(வயது 8, பருத்தித்துறை), பென்ராசா இன்பம்(வயது38, மணற்காடு), இம்மானுவேல் ராஜீவன்(வயது 16, மணற்காடு), சிங்கன் பிலிப்பையா (வயது 75, மணற்காடு), மதியழகன் பேபிதுஷியந்தி (வயது 2, மணற்காடு), திருச்செல்வம் ரூபா(வயது 19, மணற்காடு), அன்ரன் சேவியர் மரியகெரிற்றா(வயது 34, மணற்காடு), அன்ரன் சேவியர் டிலோசினி (வயது 22, மணற்காடு), பேதுருப்பிள்ளை மலர் (வயது 60, மணற்காடு), ஜோசப் சிவமாலையம்மா (வயது 80, மணற்காடு), பன்னீர்செல்வம் மேரி யுனெஸ்ரா(வயது 8, மணற்காடு), அடைக்கலம் வாஷிங்ரன்(வயது 40, மணற்காடு), வாஷிங்ரன் பவா(வயது 25, மணற்காடு).

(ஐ-173-70)

# மருதங்கேணியில் கரையொதுங்கிய சடலங்கள் கடற்கரையிலேயே குழி தோண்டிப் புதைப்பு

**- மருதங்கேணியிலிருந்து எஸ்.அற்புதன், எஸ்.வசந்தன் -**

யாழ்ப்பாணம்,டிசெ.28

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அனர்த்தத்தில் மருதங்கேணி, தாளையடிப் பகுதிகளில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் இரண்டாவது நாளாக நேற்றும் கரையொதுங்கிக்கொண்டேயிருந்தன.

நேற்று மட்டும் நூற்றுக்குமேற்பட்ட சடலங்கள் கரையொதுங்கின.

இவ்வாறு கரையொதுங்கும் சடலங்கள் கடற்கரைப் பகுதியிலேயே உடனுக்குடன் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன.

உறவினர்கள் வந்து அடையாளம் காட்டி எடுத்துச்சென்ற ஓரிரு சடலங்களைத் தவிர ஏனைய சடலங்களை மீட்புப் பணியாளர்கள் கடற்கரைப் பக்கமாக இருக்கும் தரவைகளில் புதைத்தனர்.

நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டு மருதங்கேணி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி சடலங்களும் இவ்வாறு புதைக்கப்பட்டன.

தரவைப் பகுதிகளில் சடலங்களைப் புதைப்பதற்கு புல்டோசர்கள் மூலம் பாரிய குழிகள் தோண்டப்பட்டன. அந்தக் குழிகளுக்குள் தொகுதி தொகுதியாகச் சடலங்கள் மூடப்பட்டன.

தமிழீழக் காவல்துறையின் விசேட அணிகள் மருதங்கேணி, தாளையடி, மாசார் ஆகிய பகுதிகளில் வீதி ஒழுங்குகளைக் கவனித்துக் கொண்டிருக்க, மற்றோர் அணி கடற்கரைகளில் மீட்புப் பணிகளை நெறிப்படுத்திக்கொண்டிருந்தது.

மேற்படி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து பளை, மாசார், பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தஞ்சமடைந்திருக்கின்ற மக்களில் சிலர் நேற்றுத் தத்தமது இடங்களுக்குச் சென்று வீடுகளில் எஞ்சியிருந்த பொருள்களை எடுத்து வந்தனர்.

கடல் பெருக்கில் அள்ளுண்டு போன வீட்டுப் பாவனைப் பொருள்கள் மற்றும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பனவும் ஆங்காங்கே கரையொதுங்கின.

அவற்றில் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டு பெற்றுக்கொண்டவை போக எஞ்சியவை காவல்துறையினரால் பொறுப்பேற்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (4-5)

# மீட்புப் பணிகளில் புலிப் போராளிகள்!

மருதங்கேணி,டிசெ.28

வடமராட்சி கிழக்கில் சடலங்களை மீட்கும் பணியில் நேற்று விடுதலைப் புலிப் போராளிகள் பெரும் எண்ணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கடற்கரைப் பகுதிக்கு நேற்றுக்காலை வாகனங்களில் வந்திறங்கிய நூற்றுக்கணக்கான ஆண், பெண் போராளிகள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் சடலங்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

புலிப் பொறுப்பாளர்கள் மற்றும் பிரமுகர்கள் சம்பவ இடங்களுக்கு நேரடியாகச் சென்று மீட்புப் பணிகளை நெறிப்படுத்தினர். (4-5)

# வடமராட்சி கிழக்கில் நேற்றும் இடையிடையே கடற் கொந்தளிப்பு

செம்பியன்பற்று,டிசெ.28

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி தாளையடிப் பகுதிகளில் நேற்றும் சிறிதளவு கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

நேற்று நண்பகல் வேளையில் அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது திடீர் திடீரென கடல் அலைகள் மேலெழுந்து வந்தன. இதனால் மீட்புப் பணியாளர்கள் அங்கிருந்து ஓடி வருவதும் அலை ஓய்ந்ததும் மீண்டும் திரும்பிச்சென்று மீட்புப் பணிகளை மேற்கொள்வதுமாக மிகுந்த சிரமப்பட்டுக்கொண்டிருந்தனர்.

கடல் அலைகள் இடையிடையே மேலெழுந்து கொண்டிருந்ததால் கடற்கரைக்குப் பொதுமக்கள் செல்வதற்கு காவல்துறையினர் அனுமதிக்கவில்லை. (ஐ-4-5)

# பருத்தித்துறைக் கடல் நேற்றும் குமுறியது

கரவெட்டி,டிசெ.28

பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்றும் கடல் கொந்தளித்துக்கொண்டிருந்தது.

நேற்றுக்காலை தங்கள் வீடுகளைப் பார்த்து வரச் சென்றோர் பெரும் இரைச்சலுடன் கடல் அலைகள் எழுவதைக் கண்டு மரணபீதியுடன் திரும்பினர்.

அனர்த்தம் பாதித்த பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என்ற எச்சரிக்கையையும் மீறிச் சென்றவர்களே இவ்வாறு தலைதெறிக்க ஓடி வந்தனர். இதனையடுத்து மீண்டும் ஒலிபெருக்கிகள் மூலம் மக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். (ஐ-70-173)

# உடைமைகள் களவாடப்படுவதை தடுக்க இளைஞர்கள் காவல்

வடமராட்சி,டிசெ.28

கடற்பூகம்பம் தாக்கிய வடமராட்சி கரையோரப் பிரதேசங்களில் மக்கள் வெளியேறியிருப்பதையடுத்து அவர்களது உடைமைகள் களவாடப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து, மக்கள் வெளியேறிய பகுதிகளை அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் கண்காணிக்க ஏற்பாடாகி உள்ளது.

குழுக்களாக இணைந்து தத்தமது பகுதிகளில் உடைமைகளைப் பாதுகாப்பதிலும் வெளியாள்கள் கிராமங்களுக்குள் நுழைவதைத் தடுப்பதிலும் இளைஞர்கள் ஈடுபடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், தமிழீழ காவல்துறையின் குற்றத்தடுப்புப் பிரிவு இதுவிடயமாக விடுத்துள்ள செய்திக்குறிப்பில் -

26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பின் காரணமாக எமது மக்களுக்கு வரலாற்றில் இதுவரை நிகழ்ந்திராத பேரழிவு ஏற்பட்டுள்ளது. மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்ட நிலையிலும் சொத்துக்கள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையிலும் கரையோரப் பிரதேசங்கள் காணப்படுகின்றன.

மீட்பு நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்ற இவ்வேளையில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் ஒரு சிலர் மக்களின் உடைமைகளைக் களவாடிச் செல்கின்றதை அவதானிக்க முடிகின்றது.

தயவுசெய்து இவ்வாறான செயல்களில் ஈடுபடவேண்டாமென சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இதனையும் மீறிச் செயற்படுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு மக்கள் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதனை அறியத்தருகின்றோம் - என்று உள்ளது.

(ஐ-எ-15)



**நிவாரணப் பணிகளில்**

# புலிகளையும் இணைத்து செயற்பட ஜனாதிபதி உறுதி

கொழும்பு,டிசெ.28

தற்போதைய அனர்த்தத்தினால் பாதிப்புற்றோருக்கு உதவுவதிலும், அவர்களின் நலன் குறித்து சிரத்தை எடுக்கும் நடவடிக்கைகளிலும் புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் இணைத்துத் தாம் செயற்படவிருக்கின்றார் என இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

நேற்று பி.பி.ஸி. சேவைக்குத் தொலைபேசி மூலம் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் அனைத்து உதவிகளும், நிவாரணங்களும், கவனிப்புகளும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்கப்படும். இதில் எந்தவிதப் பாகுபாடும் காட்டப்படமாட்டாது என்றும் அவர் அந்தப் பேட்டியில் உறுதியளித்தார்.

இப்பணிகளைக் கவனிப்பதற்காக உயர் மட்டக் குழு ஒன்றைத் தாம் அமைக்கப் போகிறார் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி குமாரதுங்க, புலிகள் உட்பட சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் இந்தப் பணியில் தாம் இணைத்துக் கொள்வார் என்றும் அப்பேட்டியில் அவர் தெரிவித்தார். (எ-க)

கடற்பெருக்கத்தால் பருத்தித்துறை முனைப் பகுதியில் தரித்துநின்ற மீன்பிடிப் படகுகள் நாசம் செய்யப்பட்டிருப்பதையும் - அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள் பகிர்ந்தளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள் : சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நீளத்துக்கு மிகப்பாரிய அழிவு கண்ட முல்லைத்தீவுக் கரையோரப் பிரதேசம்

## சடலங்கள் தொடர்ந்து மீட்கப்படுகின்றன

-முல்லைத்தீவிலிருந்து உதயன் விசுவமடுச் செய்தியாளர்-

ஞாயிற்றுக்கிழமை சீற்றம் காட்டிய கடல் கோளினால் கரையோரப் பகுதிகளான சுண் டிக்குளம், நல்லதண்ணித்தொடுவாய், கோர மோட்டை, பேப்பாரம்பிட்டி அடங்கலாக முல்லைத தீவு வரையான பிரதேசம் ஒரே நீளத்துக்கு மிகப்பாரிய அளவில் பாதிக்கப்பட்டு நாசமாகி உள்ளது. இருபது சதவீதமான மக்கள் இறந் திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இப்பகுதிகளுக்கு நேற்றுச் சென்ற உத யன் செய்தியாளரினால் மக்கள் நடமாட்டத் தைக் காணமுடியவில்லை. ஒரு சில குடும்பத் தலைவர்களையும் குறைந்த எண்ணிக்கை யான மக்களையுமே சந்திக்க முடிந்தது. இந் தக் கிராமங்களில் எதுவுமே மிச்சமில்லை என்று கூறுமளவுக்கு அவை வெறிச்சோடிக் காணப்பட்டன; நிர்மூலமாகியுள்ளன.

மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்து சடலங் களைத் தேடிக்கண்டுபிடித்து மீட்டுக் கொண்டிருப் பதைக் காணமுடிந்தது.

கடல் அலைகளால் தூக்கி வீசப்பட்ட பெரும் எண்ணிக்கையான சடலங்கள் காடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்டன. ஆங்காங்கே காணப்ப டும் குழிகளிலும் சடலங்கள் மூடுண்ட நிலை யில் இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

மீட்புப் பணியாளர்கள் மிகுந்த சிரமங்க ளின் மத்தியில் உயிரிழந்தவர்களின் சடலங் களைத் தொடர்ந்து தேடி மீட்டுக் கொண்டி ருந்ததை நேரில் காணக்கூடியதாக இருந்தது.

**முல்லைத்தீவில்**

முல்லைத்தீவுக்குச் சென்றவேளை அங்கு இயற்கை கொடூரத் தாண்டவமாடியதற்கான தட யங்களைக் காணமுடிந்தது. பெரும் அழிவுக ளும் சேதங்களும் முல்லைத்தீவின் கடற்க ரைப் பிரதேசங்களை நாசமாக்கி உள்ளன. அந்தப் பகுதிகள் கடற்கோளினால் உருமாறி விடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

மீட்கப்பட்ட சடலங்கள் முள்ளியவளை வித் தியானந்தாக் கல்லூரி, மத்திய மருந்தகம், புதுக குடியிருப்பு மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களுக்குத் தொடர்ந்து எடுத்துவரப்பட் டதை நேற்று நண்பகல் வரை காணமுடிந்தது.

இதற்கிடையில், ஒட்டுசுட்டான் வீதியில் 110 சடலங்களைப் புதைப்பதற்கு ஏற்பாடுகள் செய் யப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால், பிற்பகல் 2.30 மணிவரையில் 190 சடலங்கள் வந்து சேர்ந்ததை அவதானிக்க முடிந்தது. முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரியில் மட்டும் சுமார் முந்நூறு சடலங்கள் வைக்கப்பட்டுள்ள தாக முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி உதயனுக்குத் தெரி வித்தார். (அ-402)

# இடம்பெயர்ந்த மக்கள் 20 முகாம்களில் தங்கவைப்பு

கரவெட்டி,டிசெ.28

கடற்சீற்றத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் 20 முகாம் களில் தங்க வைக்கப்பட்டு, அத்தியாவசிய உத விகள் வழங்கப்படுகின்றன.

இவர்களுக்கான உதவிகளை பளை, வடமராட்சி அரசியல்துறையினரும், கடற்புலிக ளும் இணைந்து வழங்கிவருகின்றனர். உலர் உணவுகள், பாய்கள், உடுதுணிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

யாழ்பல்கலைக்கழக மாணவர்களும் உதவி களை வழங்கிவருகின்றனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள வர்களுக்கு, உணவு வழங்குதல் மற்றும் பரா மரிப்பு வேலைகளில் முன்பள்ளி ஆசிரியர்கள், வடமராட்சி மாணவர் ஒன்றியத்தினர் ஆகியோர் ஈடுபட்டுவருகின்றனர். (8-70-204)

# பாதிக்கப்பட்ட பல்கலை மாணவரின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களின் விவ ரங்கள் திரட்டப்படுகின்றன.

மேற்படி அனர்த்தம் காரணமாகப் பாதிக் கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள், உத்தி யோகத்தர்கள் அவர்களைச் சார்ந்த பாதிக்கப் பட்டவர்களின் விவரங்களை உதவிப் பதிவா ளர், நலச்சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அல்லது 021 222 6716 என்னும் தொலைபேசி இலக்கத் துக்கு அறியத்தருமாறு நலச்சேவைகள் உத விப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் கேட்டுள் ளார். (8-204)

# ஆவணங்கள் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தின் காரணமாகக் காரைநகர் கடற் கரையில் தவறவிடப்பட்டிருந்த எண்குணன் லோகேஸ்வரன் என்பவரது 'கிரடிட்காட்' மற்றும் இதர ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று யாழ்.செயலக உதவி அரச அதிபரின் (தலை மைப்பீடம்) அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

குறிப்பிட்டநபர் வெளிநாடு ஒன்றிலிருந்து அண்மையில் நாடு திரும்பியவர் எனவும் அவ ரது வெளிநாட்டு முகவரி 2/159, Hawkesbury Rd., Westmead, Nsw 2145 என்றுள்ளதாகவும், உரியவர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தலைமைப்பீட உதவி அரச அதிபர் தெரிவித் தார். (8-6)

# அவதியுறும் மக்களுக்கு உதவ! துயர்துடைப்பு நிதியம் ஆரம்பம

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை சேர்ந்த குடும்பங்களுக்கு உதவும்முகமாக நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

'இயற்கை அனர்த்த பாதிப்பின் துயர்துடைப்பு நிதியம்' என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட் டுள்ள இந்நிதியத்திற்கு நல்மனம் படைத்தவர்களிடமிருந்தும், கூட்டுறவு, அரச மற்றும் அரசசார் பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

இந்நிதியத்திற்கு உதவிகள் வழங்கவிரும்புவோர் திருநெல்வேலியிலமைந்துள்ள நல்லூர் ப.நோ.கூ.சங்கக் கிராமிய வங்கியின் 11719 என்னும் கணக்கிலக்கத்திற்கு அல்லது தங்கள் பகுதிகளிலுள்ள தேசிய எழுச்சிப் பேரவைச் செயலகத்தில் நேரடியாக வழங்கி உதவுமாறு தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் கேட்டுள்ளார். (8-204)

# சேதமடைந்த பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது

கரவெட்டி,டிசெ.28

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடற்கொந்தளிப்பால் சேதமடைந்த பிரதேசங்கள் எங்கும் துர்நாற்றங்கள் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய கடல் அலைகளில் சிக்கியும் சேதமடைந்த கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியும் பல நூற்றுக்கணக்கானோர் இறந்துள்ளனர். கால்நடைகளும் பெரு மளவில் உயிரிழந்துள்ளன.

இடிபாடுகளுக்குள் சிக்கி இறந்தவர்களுடைய சடலங்களிலிருந்தும் இறந்துபோன கால் நடைகளின் உடல்களிலிருந்தும் இத்துர்நாற்றம் வீசத்தொடங்கியுள்ளது.

இதனால், தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகின்றது. (8-70-204)

# முல்லைத்தீவுக் கடற்கரையில் இனங்காணப்பட்ட சடலங்கள் விவரம்

விசுவமடு,டிசெ.28

முல்லைத்தீவில் சுண்டிக்குளம், நல்லதண் ணித்தொடுவாய், கோரமோட்டை, பேப்பாரம் பிட்டி ஆகிய இடங்களில் இதுவரை மீட்கப் பட்ட சடலங்களில் இனங்காணப்பட்டோரின் விவ ரங்கள் வருமாறு:-

சுசி மரியடியூலா (வயது 18), வினோயன் (வயது 6), வினோதினி (வயது 5), ஜெயந்தன் (வயது 2), மனோவதனி (வயது 12), சுதாகனி (வயது 10), கஜேந்தினி (வயது 1), லதா (வயது 26), டிலக்சன்(8 மாதம்), ரஞ்சி (வயது 27), அனிந்தன், ஜெனிற்றா(வயது 5), திலோசினி (வயது8), இவரது சகோதரர்கள் இருவர் கீர்த்திகன் (வயது 5), கோபிகா (வயது 2), இவரது தாயார் நவலட்சுமி (வயது 26), பார் வதி (வயது 75). (8-402)

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் இனங்காணப்பட்ட சடலங்கள் விவரம்

விசுவமடு,டிசெ.28

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைத்து உறவினர்களால் இனங்காணப்பட்ட சடலங்களில் விவரம் வருமாறு:-

அமிர்தநாதன் மேரி சுமித்திரா (வயது 16), மேரிபவினா (வயது 9), வேலாயுதம் சுகந் தினி (வயது 23), யோ.மேரிறொக்சி (வயது 18), சு.நேசநாயகம் (வயது 28), சுரேஸ்குமார் ஜெகதீஸ்வரி (வயது 26), அந்தோனிப்பிள்ளை தவமணி (வயது 40), குருமூர்த்தி யூடிற் (வயது 34), கம்சிகா (வயது 6), கென்சிகா(வயது 3), யேசுதாசன் சுஜி (வயது 32), கலிங்கராசா சுலோசனா (வயது 30), க.யாழினி (வயது 07), கணேஸ் கீர்த்தனா (வயது 7), அன்ரன் மேரி கறிஸ்ரிகா (வயது 40), தயாளன் தர்கன் (வயது 02), மேரி மைதிலி (வயது 1), அந்தோனி பர் ணாந்து (வயது 60), அ.கின்சி சுகந்தினி (வயது 1), ஜெயக்குமார் மரியகொற்றி (வயது 37), இராசதுரை பேபி (வயது 60), பிலிப் யூட்டன் தவமலர் (வயது 24), கேமிஸ் புனிதா (வயது 12), மார்க்கண்டு நல்லம்மா (வயது 65), அந்தோனிப்பிள்ளை வளர்மதி (வயது 23), வசந்தா (வயது 35), ஜே.தவசீலி (வயது 36), ஜெயக்குமாரி (வயது 4), ஜெமில்ராஜ் (வயது 4), விலக்ஷிகா (வயது 9), தோமஸ் சூசைப் பிள்ளை (வயது 72), சூசைப்பிள்ளை அன்ன மேரி, சாமுவேல் போல் (வயது 4), மகேந்திர ராசா கயல்விழி (வயது19), வரதலட்சுமி (வயது 35), சோபிகா (வயது 11), அபிஷா (வயது 4), மரியபலன் மரியஜெயா (வயது 34), கனகநாயகம் ஜெயந்தினி (வயது 25), குழந்தை (ஒன்றரை வயது), சூசை துரைசிங்கம் (வயது 65), மரி யதாஸ் அன்ரன்தாஸ் (வயது 45), விஜிதா (வயது 12), ஜீவதாஸ் (வயது 5), சுரேஸ்குமார் ஜெகதீஸ்வரி (வயது 21), சிறிகாந் பவானி (வயது 42) முருகானந்தராசா அமிர்தராணி, பிரதீப் (வயது 5), விசிந்தா (வயது 13), சுகந் தினி (வயது 1), வின்சன் குயின் டொக்ஷா (வயது 17), ஆசீர்வாதம் சாந்தன் (வயது 30), அன்ரன் சியோல் மரியதாஸ் தேவநந்தினி (வயது 40), தனம் மகேஸ்வரி (வயது 53), சந்திரமோகன் சசிகலா (வயது 28), சங்கர் (வயது 27), மத்தி யாசு சில்வா விமலசேனா(வயது 16), விமல சேனா, தெபோரா எக்சலின் குட்வின் குரூஸ ரன் (வயது 40), செல்வரட்ணம் பிலோமினா, அருள்ராஜா சுலக்ஷனா (வயது 16), அருள் ராஜா அஞ்சலினா (வயது3 5), ரவிசங்கர் (வயது 27), சுப்பையா செல்வமணி (வயது 38), சதா சிவம் ஜஸ்வினி(வயது 10), தங்கராசா அஜந் தன் (வயது 9), ஜெயசீலி (வயது 33), சுஜந் தன் (வயது 5), ஜெ.சுபி (வயது 10), சி.சுஜந் தன் (வயது 7), காளியம்மா (வயது 73), தனுசு (வயது 4), நிஷாந்தன் சுஜீனா(வயது 4), பார்த்த சாரதி வினோதினி(வயது 23), பா.அகிஸ்கா (வயது2), பா.அகிஸ்காந (வய்து 8), மகாதேவன் இழையவன் (வயது 50), கணேசன் கவிதா (வயது 14), ஜெனா (வயது 6), வேலாயுதம் சுகந்தினி (வயது 26), தமிழ்ச்செல் வன் யோகேஸ்வரி (வயது 37), நிறஞ்சன்குமார் நிஷாந்தினி (வயது 26), சத்தியநாதன் சதாசிவம் (வயது 48), சதாசிவம் புஸ்பா (வயது 46), சதா சிவம் வினோதினி (வயது 14), அன்ரன்மேரி (வயது 26), சந்திரசேகரம் மேரி அகிலா (வயது 25).




# மந்திகைக்கு வந்த சடலங்களில் அடையாளம் காணப்பட்ட 34 பேர்

வடமராட்சி,டிசெ.28

இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்த வரின் சடலங்களில் ஒரு தொகுதி மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. அவற் றில் அடையாளம் காணப்பட்ட 34 பேரின் பெயர்கள் வருமாறு:-

தே.இளவரசி, க.தேசிங்கராஜா, ஜே.வனிதா, இ.அமராவதி, அ.சர்மிளா, ந.சின்னராசா, செ.பிர பாகரன், சூ.சுலோஜனா, ந.நவநீதன், க.சிவக் கொழுந்து, செ.சுலோஜனா, ந.நவநீதன், க.சிவக் கொழுந்து, செ.இம்பிரான், செ.கிளி, ம.அரிய குலேந்திரா, அ.லோசிகா, அ.அமலரக்கம்மா, சி.மீனாட்சி, பு.சரஸ்வதி, சி.சுகிர்தா, இ.அர்ச் சுனா, ஆ.வள்ளியம்மை, க.இலட்சுமியம்மா, க.தங்கலீலா அம்மா, அ.ராஜேஸ்வரி, க.சந்திர காந்தன், அ.கனிஸ்டன், அ.ஜெனிஸ்ரன், தி.மகாலட்சுமி, க.நாகமுத்து, ம.அம்மன்கிளி, அ.அமலோத்திரம், க.ஆறுமுகம், அ.சூரியப் பிரகாசம், அ.கிரிசாந்த், சி.கிருஷ்ணப்பிரியா ஆகிய 34 பேர் மட்டும் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இவர்கள் மணற்காடு, கற்கோவளம், பொலி கண்டி, சக்கோட்டை, இன்பருட்டி, பருத்தித்துறை, மணற்காடு, குடத்தனை ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்தவர்களாவர். பருத்தித்துறை நீதவான் க.அரியநாயகம் மரணவிசாரணை நடத்தி சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி உத்தரவிட்டார்.

இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அரச செலவாக யாழ்.அரச அதி பர் தலா இரண்டாயிரம் ரூபாவை உடனடி யாக வழங்குமாறு உத்தரவிட்டார். ஏனைய சடலங்கள் அடையாளம் காண்பதற்காகப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. வல்வெட்டித் துறை வைத்தியசாலை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. (ஐ-7-173)

# சமைத்த உணவுகளை அளவுக்கதிகமாக சேகரிப்பதால் அவை பழுதடையும் நிலை

## உலர்ந்த உணவு வகையே பழுதடையாது என அறிவுறுத்தல்

கரவெட்டி,டிசெ.28

வடமராட்சிக் கடல் அனர்த்தங்களால் பாதிப் புற்ற மக்களுக்கு யாழ். குடாநாட்டின் பலபாகங் களில் இருந்தும் உலர் உணவுப் பொருள்கள், மதிய உணவு போன்ற உணவுப் பொருள்கள் உடுதுணிகள், பால்மா போன்றவை வந்து குவிந்தவண்ணமாக இருக்கின்றன.

பாதிப்புற்ற மக்களுக்காக யாழ்.குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் லொறிகளிலும் வாக னங்களிலும் நிவாரணப் பொருள்கள் கொட்டும் மழையிலும் இரவு, பகல் பாராது வடமராட் சிக்கு வந்த வண்ணமாக உள்ளன.

சில பகுதிகளில் வாகனத் தொடர் அணிக ளில் உதவிப் பொருள்கள் வந்துசேர்ந்தன.


அளவுக்கு அதிகமாகச் சமைத்த உணவுகள் எடுத்துவரப்பட்டதால் அவை மிக மிஞ்சி தேங் கிப் பழுதடைந்தன எனவும் சுட்டிக்காட்டப்பட் டது.

சமைத்த மதிய உணவை விட உலர்ந்த உணவு வகைகளையும் அதிகமாகச் சேகரித்து வழங்குவதே தற்போதைய கட்டத்தில் பொருத் தமாக இருக்கும் என்று நிவாரணப் பணியாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பேரவலக் காட்சிகள்...

























இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருக்கும் மக்கள்.

படங்கள்:- அற்புதன், வசந்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

# சந்திரிகாவுக்கு அரியதோர் வாய்ப்பு!

வரலாற்றில் மிகக்கோரமான இயற்கை அனர்த்தத்தை இலங்கை சந்தித்துள்ளது.

இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளே இந்தப் பேரனர்த்தத்தில் சொல்ல முடியாத - கணக்கிட்டுக்கூற இயலாத - அளவுக்கு பேரழிவைச் சந்தித்திருக்கின்றன. ஏறத்தாழ பத்தாயிரம் பேர்வரை இலங்கைத் தீவில் கடற்கொந்தளிப்பினால் காவு கொள்ளப்பட்டியிருக்கின்றார்கள்.

நாம் நேற்று இப்பத்தியில் சுட்டிக்காட்டியதுபோல இயற்கை அனர்த்தம் மொழி, இனம், நாடு, இடம்பார்த்து இடம்பெறுவதில்லை. என்றாலும் இலங்கைத்தீவைப் பொறுத்தவரை கடல் கொண்ட இந்தப் பேரனர்த்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களுக்கு அவசர நிவாரண உதவிகள் தேவைப்படுகின்றன.

சரியோ, பிழையோ இலங்கைத்தீவில் இரண்டு நிர்வாகங்கள், இரண்டு அதிகாரக் கட்டமைப்புகள், ஆட்சிமுறைகள் உள்ளன என்பது யதார்த்தம்.

வடக்கு - கிழக்கில் இந்தக் கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தில் பாதிப்புற்ற பிரதேசங்களில் கணிசமானவை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு உட்பட்டவை.

இந்த அனர்த்தங்களினால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவதற்கு சர்வதேச உதவிகளைக் கோரியுள்ள அரசு, அவற்றைத் தனது கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - பாதிப்புற்ற மக்களுக்கு எப்படி வழங்கப்போகின்றது, எப்படி கிட்டச் செய்யப்போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.

குறுகிய அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் நோக்கவேண்டிய பிரச்சினை இது.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் பி.பி.ஸி. செய்தியாளர் இந்த விடயத்தைக் கேட்கத் தவறவில்லை. ஒரு நாட்டுத் தலைவருக்குரிய பொறுப்புணர்வோடு ஜனாதிபதி குமாரதுங்க பதிலளித்தார் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

எந்த வேறுபாடுகளுமின்றி - நாட்டின் ஏனைய பகுதிகளில் பாதிப்புற்றோருக்குக் கிடைக்கும் அனைத்து உதவிகளும், வசதிகளும் கவனிப்பும் இவர்களுக்கும் (புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பாதிப்புற்ற மக்களுக்கும்) கிடைக்கும் என்பதை உறுதிபடக் கூறுகின்றேன். இந்த விடயத்தைக் கையாள்வதற்கு உயர் மட்டக் குழு ஒன்றை நியமிக்கவுள்ளேன். அதில் புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொள்வேன் - என்று தாரளப் போக்கில் கருத்துக் கூறியிருக்கின்றார் அவர்.

நல்லது. அந்தப் போக்கில் அவர் மாறாமல் இந்த விடயத்தை முன்னெடுப்பாரா என்பதை சர்வேதேச சமூகமும், இலங்கை மக்களும் பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

இலங்கைத் தீவில் இரண்டு நிர்வாகக் கட்டமைப்புகள் இருக்கின்றன என்ற யதார்த்தத்தை ஜனாதிபதி உணர்ந்து கொண்டிருப்பாரானால்-

இந்த அனர்த்தத்தில் பாதிப்புற்ற அனைத்து மக்களுக்கும் ஒரே விதமாக நிவாரண உதவிகளும், கவனிப்பும் வேறுபாடின்றிக் கிட்டவேண்டும் என ஜனாதிபதி கருதுவாரானால் -

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் நிவாரணப் பணிகளில் அரசுத் தரப்புக்குக் கொடுக்கும் அதே முக்கியத்துவத்தையும், பொறுப்பையும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகளுக்கு வழங்கவேண்டும். அதுதான் நியாயம்.

நிரந்தரப் பகைவர்கள் கூட இழப்பில் - சோகத்தில் தங்களுடைய பகைமை உணர்வை மறந்து, ஒருவரையொருவர் ஆற்றி, அதன் மூலம் நட்புறவை வளர்த்துக் கொள்ள முற்படுவதை வீட்டில் - குடும்பத்தில் - கிராமத்தில் - ஊரில் - நாம் அவ்வப்போது பார்க்கின்றோம்.

இப்போது இனப் பிரச்சினையால் பிளவுபட்டிருந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் இனவேறுபாடின்றி இயற்கையின் சீற்றத்துக்கு முகம் கொடுத்து தாங்கமுடியாத அவலத்தில் துடித்துப் பதைத்து நிற்கின்றன.

இந்தச் சோகத்துக்கு மத்தியில் ஒரு புரிந்துணர்வு ஏன் ஏற்படக்கூடாது? ஒருவர் மீது மற்றொருவர் ஏன் கழிவிரக்கம் கொள்ளக்கூடாது?

'Rlessing in Disguise' என்று ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உண்டு. இழப்பிலும் சிறப்பு என்ற அந்த உரிய நிலையை வெளிப்படுத்துவதற்கு இந்த இயற்கை அனர்த்த சோகத்தைப் பயன்படுத்த ஜனாதிபதி - நாட்டின் தலைவி- ஏன் முன்வரக் கூடாது?

நாட்டை உலுப்பியுள்ள மிக நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் முன்மாதிரியாக - தாராள மனப்பான்மையோடு - செயற்படுவதன் மூலம் தமிழர்கள் மத்தியில் ஜனாதிபதி தொடர்பாக ஏற்பட்டிருக்கும் அவப் பெயரையும், நம்பிக்கையீனத்தையும், குரோத எண்ணத்தையும் களைவதற்கு ஜனாதிபதி ஏன் எத்தனிக்கக் கூடாது? அதன் மூலம் இந்த நாட்டை நிரந்தரமாகப் பீடித்திருக்கும் இனப் பிரச்சினை என்ற கொடூரக் கேட்டை கழித்து அகற்றுவதற்கு உகந்ததான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு பரஸ்பர நம்பிக்கையை நிலைநாட்டுவதற்கு - அவர் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?

செய்வாரா ஜனாதிபதி?

இல்லை, டக்ளஸ் தேவானந்தா போன்ற தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட தனக்கு ஜால்ரா போடுகின்ற - சிலரை நியமித்து அவர்கள் கவனிப்பிலும், பொறுப்பிலும் இந்தப் பணியை ஒப்படைத்து, அதன் மூலம் இனப்பகையை நிரந்தரமாய் நிலை நிறுத்தும் கைங்கரியத்தை மேற்கொள்வாரா?

பொறுத்திருந்து பார்ப்போமே!

## தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க
# அடையாளம் காணாத சடலங்கள் இன்று பொது இடத்தில் புதைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் அடையாளம் காணப்படாத சடலங்களை இன்று செவ்வாய்க் கிழமை அரச செலவில் அடக்கம் செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தகவலை வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை மருதங்கேணி மற்றும் பருத்தித்துறை கடற் பிரதேசங்களில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில் சிக்கி பல நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இவற்றில் முந்நூறு சடலங்கள் மருதங்கேணி வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளன என்றும் -

பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட 72 சடலங்களில் இதுவரை 40 சடலங்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை ஒரு சில நாள்களுக்கு மட்டுமே வைத்தியசாலைகளில் வைத்திருக்க முடியும் என்று தெரிவித்த சுகாதாரப் பணிப்பாளர், தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க அடையாளம் காணப்படாத சடலங்களை அரச செலவில் பொது இடம் ஒன்றில் இன்று புதைப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

(ஐ-7-6)

# அச்சு இயந்திரத் தொழில்நுட்ப வல்லுநரான அற்புததேவன் கீரிமலையில் உயிரிழப்பு!

## அவரோடு சேர்ந்து இருபுதல்வர்களையும் கடல் காவுகொண்டது

யாழ்ப்பாணம்,டிசெ.28



குடாநாட்டில் அச்சுத்துறை இயந்திரங்களைத் திருத்தும் மற்றும் புதுப்பிக்கும் தொழில்நுட்பப் பணிகளில் வல்லுநராக விளங்கிய முத்துக்கிருஷ்ணர் அற்புததேவன் (மாயவர்) அகால மரணமாகியுள்ளார் என்பதனை மிகுந்த வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

நேற்றுமுன்தினம் காலை நிகழ்ந்த கடற் பூகம்பத்தின்போது கீரிமலைப் பகுதியில் ஏற்பட்ட அனர்த்தத்தில் அவரையும் அவரது இரு புதல்வர் களையும் கடல் காவு கொண்டது.

தமது தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகளின் நிமித்தம் அவரும் அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களும் கீரிமலைத் தீர்த்தக் கேணிக்குச் சென்றிருந்த சமயம் இந்த அவலம் நேர்ந்தது.



யாழ்ப்பாணத்தில் அச்சுத் துறை இயந்திரங்களைப் பழுது பார்ப்பதிலும் அவற்றைப் புதுப்பித்து இயக்குவதிலும் அவை சார்ந்த தொழில்நுட்பப் பணிகளிலும் கைதேர்ந்த ஒரு வல்லுநராக விளங்கியவர் அற்புததேவன் (வயது 53). அவரது தந்தையார் முத்துக்கிருஷ்ணன - இவரும் மாயவர் என்றே அழைகக்கப்பட்டவர் - தமது காலத்தில் தந்தையாரும் அச்சுஇயந்திரத் தொழில்நுட்ப வல்லுராக விளங்கியவர். தனது தந்தையிடம் இருந்தே இந்தத் தொழில்நுட்பக் கலையைக் கற்றுத் தேர்ந்தவர் அற்புததேவன். தொழில்திறன் காரணமாகப் பின்னாளில் அவரும் 'மாயவர்' என்றே' அழைக்கப்பட்டு வந்தார்.

அச்சு இயந்திரத் தொழிநுட்பத் துறையில் முன்னோடியாக விளங்கிய இவரது குடும்பம், வழிவழியாக இத்திறனை வளர்த்து, அதனையே குடும்பத் தொழிலாக மேற்கொண்டு வந்தது. அற்புததேவனைத் தொடர்ந்து அவரது புதல்வரான காங்கேயனும் அச்சு இயந்திரத் தொழிலைப் பயின்று திறமையை வெளிக்காட்டிவந்தார். அவரும் இரண்டாவது புதல்வரும் கூட கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்துவிட்டனர்.

அற்புததேவனும் அவரது தந்தையார் முத்துககிருஷ்ணனும் 'உதயன்' பத்திரிகையின் ஆரம்ப காலம் தொட்டு அதன் அச்சுப்பிரிவில் தொடர்ந்து பணியாற்றி வந்தனர். பத்திரிகை மக்களுக்குச் சேவைசெய்யும் சீரிய பணியின் மகிமையை உணர்ந்து - இயந்திரங்கள் சீராக இயங்கினாலேயே பத்திரிகை உரிய பணியைத் திறம்படச் செய்யமுடியும் என்பதனை உணர்ந்து - இரவு, பகல் என்று பாராமல் உழைத்து உதயனின் வளர்சசிக்கு உதவிய அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்

நவீன அச்சு இயந்திரங்கள் உட்பட (Offset) அச்சுத்துறை இயந்திரங்களைத் திருத்தும் நிபுணத்துவம் பெற்றிருந்த அற்புததேவனின் மறைவு குடாநாட்டில் அச்சுத் துறையினருக்கும் பத்திரிகை நிறுவனங்களுக்கும் பெரும் இழப்பாக அமைகிறது. அற்புததேவனின் கையும் தொழில் நுட்பத்திறமையும் படியாத அச்சு இயந்திரம் இல்லை என்று கூறுமளவுக்கு அவர் தமது தொழிலில் அடக்கமாகப் பணிபுரிந்து பிரகாசித்தார்.



அற்புததேவன் மற்றும் அவரது இரு புதல்வர்களின் மறைவுத் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினரோடு 'உதயன்' குடும்பமும் இணைகிறது.

அற்புததேவனின் சடலமும் புதல்வர்களான அற்புததேவன் காங்கேசன், அற்புததேவன் யதீசன் இருவரது உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. இவர்களது இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணிக்கு தாவடி வடக்கில் நடைபெறவுள்ளன.

அகாலமரணமடைந்த அற்புததேவனுக்கும் அவரது புதல்வர்களுக்கும் உதயன் நிறுவனம் தனது உணர்வுபூர்வமான அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறது. (ஐ)

# தொற்றுநோய் பரவாமல் தடுக்க சுகாதாரப் பகுதியினர் முழு உஷார்!

## பணிப்பாளர் தெய்வேந்திரன் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.28

வரலாறு காணாத மனிதப் பேரழிவை அடுத்து குடாநாட்டில் தொற்று நோய்கள் பரவாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு சுகாதாரப் பகுதியினர் பணிக்கப்பட்டிருக்கின்றனர்.

நோய் பரவக்கூடிய இடங்களில் சுகாதாரக் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. பணியாளர்களும், தொண்டர்களும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் இந்தத் தகவல்களை உதயனுக்கு வெளியிட்டார்.

இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் பெரும் எண்ணிக்கையில் தங்கியுள்ளனர்.

பருத்தித்துறையில் பதினைந்து இடங்களிலும், சாவகச்சேரியில் 4 இடங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள பகுதிகளில் தொற்றுநோய் பரவாது பாதுகாக்க ஒவ்வொரு பகுதிக்கும் தலா ஒவ்வொரு சுகாதார உத்தியோகத்தர் அடங்கிய குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக அந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகளுக்குக் குளோறின் இடும்பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

மலசலகூட வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6-7)

**உதயவாக்கு**

நாவடக்கம் இல்லாதவன் சினத்தை வெல்லமாட்டான்.

**நாளை**

மார்கழி 14
புதன்கிழமை
(29.12.2004)
திதி: திருதியை
பின்னிரவு. 02.26
நட்சத்திரம் : பூசம்
முன்னிரவு.07.26
சுபநேரம்: 04.59 - 06.29
ராகுகாலம்: 12.29- 01.59
(பழையநேரப்படி)

# ஒன்பது சிறுவர்கள் உட்பட 11 சடலங்கள் பொறுப்பேற்பு!

## யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து நேற்றுக் கையளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

இயற்கையின் அனர்த்தத்தினால் உயிர் இழந்து யாழ்.வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த பதினொரு பேருடைய சடலங்களும் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இவர்கள் அனைவரும் தாளையடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

உயிர் இழந்தவர்களில் ஒன்றரை வயதுக்குழந்தை உட்பட ஒன்பது சிறுவர்கள் அடங்குவர்.

அவர்களின் பெயர், விவரம் வருமாறு -

பிரதீபன் ரிசிகாந்தன் (வயது ஒன்றரை), பாலமனோகரன் மதுஷா (வயது 6), பேதுறுப்பிள்ளை சுகிர்தன் (வயது 9), உதயகுமார் மிந்துஷா (வயது 7), மனோகரன் கௌதமன் (வயது 8), பாலசுப்பிரமணியம் தங்கக்கிளி (வயது 41), அவரது மகள் பாலசுப்பிரமணியம் பேரிகா (வயது 17), சிறிறஞ்சன் சுமதா (வயது 15), ஹென்றி ரமேஸ் றோயல் (வயது 12), செ.மனோ விதுசன் (வயது 2), நடேசு இராசம்மா (வயது 60) ஆகியோரது சடலங்களே உறவினர்களினால் இனங்காணப்பட்டபின் ஒப்படைக்கப்பட்டன.

(ஐ-6-7-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

28-12-2004



மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த
திரு.திருமதி ஸதாநந்தா ~ விஜிதா தம்பதிகளின்
செல்வப் புதல்வி

செல்வி **ஸவிஸ்னா** (விதுக்குட்டி)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (28.12.2004) செவ்வாய்க்கிழமை மந்துவிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பின் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சின்னம்மம்மா, கோப்பாய் அப்பப்பா, அப்பம்மா, ஆசைச் சித்தி, ஆசைமாமா, குட்டிமாமா, அன்ரா, குட்டியன்ரா, பெரிய மாமா, சின்னமாமா, பிரான்ஸிலுள்ள ஆசை அத்தை, மாமா, மச்சாள், மச்சான்மார் மற்றும் மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், மச்சான்மார் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கும்பாவெளிப் பிள்ளையாரின் அருள்பெற்று பல்கலையும் கற்று இப்பாரினிலே சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(40154)(42-12-11-19)

முகவரி:
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

அன்புடன்
அப்பா ஸதாநந்தா.

## பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமைத்த உணவு

வட்டுக்கோட்டை,டிசெ.28

கடல் கொந்தளிப்புக் காரணமாக இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ள பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மக்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் சமைத்த உணவு வழங்கப்படுகின்றது.

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து உணவுகளை வழங்கவுள்ளதால் கருணை உள்ளம் கொண்டோர் சங்கத்துடன் தொடர்புகொண்டு இப்பணியைத் தொடர்ந்தும் முன்னெடுக்க உதவுமாறு இந்துவாலிபர் சங்கம் கேட்டுள்ளது. (8-161)

### யா/இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்

### விசேட அறிவித்தல்

க.பொ.த.உ.த. வகுப்பு மாணவிகளும்
தரம் 8A மாணவிகளும், பாண்ட் வாத்தியக்குழு
மாணவர்களும் இன்று (28.12.2004)
செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு
தவறாது கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(C/40086)(12-19-46) -அதிபர்.

### அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் இலட்சார்ச்சனைப் பெருவிழா



ஆரம்பம் : 30.12.2004 பூர்த்தி : 09.01.2005

தினமும் காலை *8.15மணி அபிஷேகம்*
*9.00 மணி அர்ச்சனை ஹோமம்*
*11.00 மணி சிறப்புச் சொற்பொழிவு*
*12.30மணி அன்னதானம்*
பிற்பகல் *2.30மணி அபிஷேகம்*
*3.30 மணி அர்ச்சனை ஹோமம்*

அடியார்களே!
இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட எம் உறவுகளின் துயரில் பங்கேற்று அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் முகமாக எம்பெருமான் சந்நிதியில் நடைபெற இருந்த இசைப்பெருவிழா இடம்பெறாது என்பதை அறியத் தருவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பிரார்த்திப்போமாக!

சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாரும்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
மருதனார்மடம் சுன்னாகம்.

(40159)(12-19-46)

## மயோன் முஸ்தபா உயிர் தப்பினார்

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின்போது ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா அகப்பட்டு பின்னர் அதிலிருந்து தப்பித்துக் கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் திருகோணமலை நிலாவெளியில் கடலில் குளித்த பின்னர் இவர் விடுதிக்கு திரும்பிக் கொண்டிருந்த போது கடல் அலையில் சிக்கிக் கொண்டதாகவும், இவரது வாகனம் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. வாடகை வாகனமொன்றில் நேற்று முன்தினம் மாலை கல்முனை திரும்பிய இவர் பாதிக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறியதோடு, முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற ஜனாசா நல்லடக்கங்களிலும் கலந்து கொண்டார். (8)

## எட்டாவது வருட நினைவுகளில்



பிறப்பு 1947 - 02 - 11

இறப்பு 1996 - 12 - 28

திருமதி
சின்னத்துரை பூரணம்

அம்மாவிடமிருந்து அன்பைப் பெற்றேன்
அதனூடாக நல்ல பண்பைப் பெற்றேன்
உன் நினைவினூடாகவே கசிந்து
ஆண்டுகள் எட்டைக் கடந்து விட்டது
என் அன்பு அம்மாவே நினைவெல்லாம்
நீயாகவே நித்தமும் நான் வாழ்கிறேன்.

கைதடி மேற்கு, கைதடி. சி.விமலன் (லண்டன்)

(40137)(12-11-19-26)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 17 07 1942

உதிர்வு 28 11 2004

திருமதி
மகேஸ்வரி
வேதாரணியம்

**அன்பின் திருவுருவே அம்மா**
**பாசத்தின் மணிமகுடமே**
**ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி**
**மீளாத்துயில் கொண்டதேனோ?**
**மாதம் ஒன்று சென்றாலும் – உன்**
**பூமுகம் மறக்குமா எம்மனம் அம்மா!**

இன்று (28.12.2004) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

(C/40084)(12)

333, நாவலர் வீதி,
கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் சீற்றத்தால் சிதறடிக்கப்பட்டோருக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குங்கள்!

## சர்வதேச சமூகத்திடம் புலிகள் அவசர வேண்டுகோள்

கிளிநொச்சி,டிசெ.28

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு உடனடி மனிதாபிமான மற்றும் நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கு உதவும்படி சர்வதேச சமூகத்திற்கும் உதவி வழங்கும் நாடுகளுக்கும் விடுக்கப்படும் ஓர் அவசர வேண்டுகோள் இதுவாகும்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சர்வதேச சமூகத்திடம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அவர் விடுத்த வேண்டுகோளின் விவரம் வருமாறு:

பல்லாயிரக்கணக்கான மக்கள் கடலின் சீற்றத்தால் அள்ளுண்டு போயுள்ளதோடு மேலும் பல்லாயிரக்கணக்கானோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் உள்ள மருத்துவ ஸ்தாபனங்கள் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றன. தமது வீடுகளையும் உடைமைகளையும் முற்றாக இழந்த மக்கள் இடம்பெயர்ந்து தற்போது பாதுகாப்பான இடங்களில் உள்ள பொதுக்கட்டடங்களில் தஞ்சம்கோரி நிற்கின்றனர்.

இரண்டு தசாப்தங்கள் நீடித்த கொடிய யுத்தத்திற்கு முகங்கொடுத்து, சமாதானத்தின் பெறுபேறான இயல்பு வாழ்க்கையை இன்னும் பெறமுடியாதிருக்கும் இம் மக்களுக்கு இந்தப் பேரனர்த்தம் நிகழ்ந்திருப்பது வேதனைக்குரியது.

மக்களமைப்புக்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளிட்ட உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள், சமூகப் பணியாளர்கள், உள்ளூர் இளைஞர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நெறிப்படுத்தலில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஓய்வின்றி செயற்பட்டு வருகின்றனர்.

நிதி மற்றும் பௌதிக வளக்குறைவுகளின் மத்தியில் மீட்புக்குழுக்கள் அதிகபட்ச நிவாரண உதவிகளை வழங்கும் வகையில் பணிபுரிகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உடுபுடவை, பாய், படுக்கை விரிப்புகள், நில விரிப்புகள், சமைத்த உணவு என்பன தேவைப்படுகின்றன.

மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு போக்குவரத்து வசதிக்குறைவு பெரும் இடர்பாடாக உள்ளது. அடிப்படைச் சுகாதார வசதிகள் அற்ற பொதுக் கட்டடங்களில் பெருந்தொகையான மக்கள் தஞ்சம் கோரியிருப்பதால பெரும் சுகாதாரக்கேடும், தொற்றுநோய் அபாயமும் ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

கடற்கொந்தளிப்பு அடங்கிவிட்ட நிலையில், மீண்டும் அனர்த்தம் விளையுமோ என்ற அச்சம் இருந்தபோதிலும், இடம்பெயர்ந்த இந்த மக்கள் பொதுக் கட்டடங்களில் தொடர்ந்து தங்கியிருக்க முடியாதென்பதால் அவர்கள் மீண்டும் தங்களுக்கென வாழ்விடங்களை அமைத்துக்கொள்ள உதவி வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்கு தேவையான அனைத்து வளங்களையும் ஏற்படுத்திக்கொடுத்து ஒரு மானுட அவலத்தை தவிர்க்க உதவுமாறு நாம் சர்வதேச சமூகத்திடம் அவசர வேண்டுகோளொன்றை விடுககிறோம்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது ஏற்பட்டுள்ள இந்த மனித அவலத்தில் இருந்து உயிர் பிழைத்தவர்களுக்கு உடனடியானதும் காத்திரமானதுமான மனிதாபிமான உதவி அவசரமாக தேவைப்படுகிறது.

இந்தவகையில், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் விரைவில் கிடைக்கத்தக்க வகையில் நன்கொடை நாடுகளும் ஐ.நா. அமைப்புக்களும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் உதவவேண்டும் என நாம் வேண்டிநிற்கிறோம் - என்றுள்ளது. (8)

## வைத்தியசாலை மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.28

நேற்று முன்தினம் இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் காரணமாக காலவரையறையின்றி மூடப்பட்டிருந்த வல்வெட்டித்துறை வைத்தியசாலை நேற்றுத் தொடக்கம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதனை வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார். (8-7-6)

## பாதிக்கப்பட்ட மக்களின் உடைமைகள் கொள்ளை

கொழும்பு,டிசெ.28

கடல் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் மக்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன என பொலீஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, பொதுமக்கள் தமது உடைமைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். மட்டக்குளி, வெள்ளவத்தை, மொறட்டுவ, தெஹிவளை, களுத்துறை, பேருவளை என தென்பகுதிக் கரையோரப் பிரதேசங்களில் பெரும்பாலான இடங்களில் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர். கிழக்கிலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இத்தகைய நிலை காணப்படுகிறது.

அச்சம் காரணமாக மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி அடுத்த கணமே கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டனர். தென்பகுதியில் கரையோரப் பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான உல்லாச ஹோட்டல்கள் உள்ளன. நத்தார்க் காலம் என்பதால் உல்லாசப் பயணிகள் பெரும் எண்ணிக்கையானவர்கள் மேற்படி பகுதிகளில் தங்கியுள்ளனர். இப்பகுதிகளிலும் கொள்ளையரின் அட்டகாசம் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலீஸாரின் லீவுகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன எனவும், லீவில் சென்றவர்களை உடனடியாகக் கடமைக்குச் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர் எனவும் பொலீஸ் திணைக்களம் தெரிவித்தது. (க-8)

## கோப்பாய் வீதிப் பற்றைக்குள் பெண் சிசுவின் சடலம் மீட்பு!

கைதடி,டிசெ.28

இறந்த நிலையில் பை ஒன்றினுள் போடப்பட்டு பற்றைக்குள் வீசப்பட்டிருநத பெண் சிசுவின் சடலம் ஒன்று கைதடி - கோப்பாய் வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள கடலேரியில் மீன் பிடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த கைதடி மேற்கைச சேர்ந்த இளைஞர்கள் சிலரே இதனைக் கண்டு பிடித்துள்ளனர். அன்றைய தினம் தமது கடமையை முடித்துவிட்டு பாலத்தின் அருகே வந்துகொண்டிருந்த இந்த இளைஞர்கள், அப்பகுதியில் உள்ள பற்றை ஒன்றின் அருகே வைக்கப்பட்டிருந்த பை ஒன்றினைக் கண்டுள்ள அவர்கள் அதனைத்திறந்து பார்த்தபோது பழைய துணிகளால் போர்த்தப்பட்டு, உரப்பை ஒன்றினால் சுற்றிக்கட்டப்பட்ட நிலையில் பெண் சிசு ஒன்று இருப்பதைக் கண்டார்கள். தொப்புள் கொடி அகற்றப்படாமல் பிறந்த சில மணித்தியாலங்களிலேயே அச்சடலம் அங்கு போடப்பட்டிருப்பதை உணர்ந்த அந்த இளைஞர்கள் உடனடியாக அப்பகுதி கிராம சேவகருக்கு அறிவித்தார்கள். அத்தோடு சாவகச்சேரி பொலீஸாருக்கும் முறைப்பாடு செய்தார்கள். அங்கு வந்த பொலீஸார் சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததோடு விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (8-75-6)

## யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று...


சகோதரர் இருவரின் சடலங்கள்.


பேர்னை அடையாளம் காட்டும் பேர்த்தியார்.


சடலத்தை அடையாளம் காட்டச் செல்லும் உறவுகள்.


சடலத்தை அடையாம் கண்டபின் கதறியழும் உறவுகள்.

படங்கள்: புஸ்பா, பிரபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருட்டு விலை அதிகரிக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.28

சுருட்டின் விலை எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் அதிகரிக்கப்படவுள்ளதாக வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி கோண்டாவிலில் அமைந்துள்ள வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-7)


புதுப்பொலிவு பெற்று வரும்
சாவகச்சேரி நகரில்
ஒரு தகவல் தொழிநுட்ப கல்லூரி
ASIAN COMPUTERS
மிக விரைவில்
எதிர்பாருங்கள்



விற்பனைக்கு
புதுவருடத்தை முன்னிட்டு விசேட கழிவு

தச்சு வேலை செய்யும் மிசின்கள் 10", 12", 14", 16" ஆகியனவும் எலற்றிக் றில்லர்கள், றவுட்டர்கள், மாபிள் கட்டிங் மிசின்கள், கிறைண்டர்கள், அலுமினியக் கட்டிங் மிசின்கள், வளைவு வெட்டும் மிசின்கள், மரம் துண்டுபோடும் வாள், பிளாஸ்ரிக் எழுத்து - வெட்டும் மெசின்கள், ஸ்ராண்ட் றில்லர்கள், வெல்டிங் பிளாண்டு வகைகள், கடைச்சல் மிசின் மற்றும் சகல விதமான எலற்றிக் உபகரணங்கள் யாவையும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், M.D.F. போட் பலகைகளும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

சுதா ரேடேர்ஸ்
இல.339, அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: கி.சுதாகரன்,
T.P.: 077 3107690.

(31-836)(10)(39-19-46-42)


## பிரதட்ஷண விழா

யாழ்ப்பாணம்,டிசெ.28

தெல்லிப்பழை கிழக்கு சித்தியம்புளியடி சித்தியம்பதி அருள்மிகு அண்ணமார் தேவஸ்தானத்தில் வருடாந்த கிராம பிரதட்ஷண விழா இன்று அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு அண்ணமார் பெருமானின் கிராம ஊர்வலம் ஆரம்பமாகி இரவு ஆலயத்தை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(8-202)

### விண்ணக வாழ்வின் 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சவிரிமுத்து ஞானப்பிரகாசம்**

(சின்னப்பொடியர் அந்தோனிப்பிள்ளை)

மண்ணில் 19-11-1926 விண்ணில் 28-12-1984

சீவியத்தில் நேசித்தவர்களே!
மரணத்திலும் மறவாதீர்கள்!

என்றும் அவரின் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 37, 6ஆம் குறுக்குத்தெரு,
குருநகர்.

(39859)(26-19-46-42)


அறிமுகம்!!!
DISH TV மற்றும் KUBAND DTH

DISH TV
STAR Sports, Espn
SUNTV, JEYA TV,
பொதிகை உட்பட 100இற்கு மேற்பட்ட சனல்கள -KU band
Dish & LNBF Decorder
அனைத்தும Rs.22,500/= மட்டுமே.

KU BAND DTH SUN TV,
பொதிகை உட்பட 35இற்கும் மேற்பட்ட சனல்கள் KU band
Dish & LNBF Digital
Receiver அனைத்தும்
Rs 16,000/= முதல்

6அடி CBAND Digital சிஸ்டம்
Rs.22,500/= மட்டும்.

10அடி CBAND System
Rs.28,500/= மட்டுமே.

மற்றும் K TV Decorder , Smart Card, கேபிள் TV இற்குரிய அனைத்து உபகரணங்களும் மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

செய்மதி தொலைக்காட்சி!

செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் TV துறைகளில் இலங்கை முழுவதும் மிக நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி வரும் Sats - Tech நிறுவனம் தனது சேவையை இலங்கை முழுவதும் NORTH LANKA TELEVISION NET WORK (NLT NET WORK) என்னும் பெயரில் விஸ்தரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது. இலங்கையில் அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் (Fiber Optical Technology)கேபிள் TV இயக்குநர்களின் இன்னல்களுக்குத் தீர்வை வழங்கிவருகின்றோம். யாழ். மாவட்டத்தில் எமது Fiber Optical MSOவில் இணைந்து பயன்பெற உடன் தொடர்புகொள்ளவும்.



SATS - TECH ENGINEER'S
M/S நஷனல் வீடியோ சென்ரர் இல. 182, கே.கே.எஸ்.வீதி, (குளப்பிட்டி சேர்ச் அருகில்) கொக்குவில், யாழ்ப்பாணம்.
(C/40031)(12-14) Phone: (021) 222 5908 / 077 6618580 / 0777 251957 ISLAND wide Hot Line: 0777 710785


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



உணர்வில் நிறைந்த எங்கள் உயிரே ஐயா நீர்
உள்ளம் நெகிழ வைத்து உம்பருலகடைந்தீரோ?
மணமும் மலருமென மனங்களால் இணைந்திருந்த
மனையாள் மக்களெனும் சுற்றமெலாம் பதறுதையா!
கணமும் மறவோம் உம் கனவுகளை வென்றெடுப்போம்
காலமெலாம் உம் பணிகள் கருத்தில் துதித்திடுவோம்!
வணங்கி மலர்தூவி வல்லவரே உம் பாதம்
வழுத்தி அஞ்சலித்தோம்! வல்லவரே அமைதி கொள்க!

எமது அன்புத் தெய்வம் 28.11.2004 அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்த அனைவருக்கும், இறுதி நிகழ்வுகளிலும், இறுதியாத்திரையிலும் நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும், தொடர்பு சாதனங்கள் மூலம் எங்கள் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் நன்றிகள்.

இன்று (28.12.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடை பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்

## முருகேசு சுப்பிரமணியம்

(குடமியன் - வரணி)

தோற்றம் 01.01.1943 மறைவு 28.11.2004

வேலுடையார் வீடு,
கேவளை றோட்,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேரனர்த்தத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்ட முல்லைநகர்







படங்கள்: விசுவமடுச் செய்தியாளர் சி.கேசவன்







இயற்கையின் சீற்றத்தால் உண்டான கோரங்களின் பதிவுகள் - முல்லைத்தீவில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பால் விற்பனைக்கு

கைபடாத பசுப்பால் சுத்தமான முறையில் இயந்திரம் மூலம் கறக்கப்பட்டு, தினசரி விநியோகத்திற்கு உண்டு.
திருநெல்வேலியிலிருந்து 3கிலோ மீற்றருக்கு சந்தைப்படுத்தத் தயாராகவுள்ளோம்.


தொடர்புகளுக்கு:
**THREE STAR FARM**
து.பவன்
T.P.: 077 6660159

☆ தரமும் சுகாதாரமும்
எமது பாலின் இரகசியம்.

(40155)(26-11-19)


## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 13 - 07 - 1933



விண்ணில் 25 - 12 - 2004

### கணபதிப்பிள்ளை குணசிங்கம்

ஒளிமயமான வாழ்வைக் கொண்டு
வந்த ஒளியின் கீற்று
ஜம்புலிங்கமே நீ ஒழிந்து போனீர்!
எங்கள் வாழ்வில் இனி
இருள் அகற்ற யார் வருவாரோ?

30/1, கல்லூரி வீதி,
யாழ். (40153)(26-11-19)

தேனுஷா, மயூரன்,
தினு, மோனால்.

## பொதுக் கூட்ட அறிவித்தல்

வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2004. 12. 30ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயல கததில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதி னால், மீளாய்வு செய்யப்பட்டு, உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், நெறியாளர் குழு உறுப்பினர்களையும் தவறாது இப்பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

தலைவர்.
சி.பாஸ்கரன்,
வ.பி.பா.ஊ.உ.ரி.கூ.சங்கம்.
பரந்தன்/கிளி.

செயலாளர்.
க.சி.மணியம்,
வ.பி.பா.ஊ.உ.ரி.கூ.சங்கம்
பரந்தன்/கிளி.

(C/40059)(12-11-19-26)

## ஆங்கிலதினப் போட்டிகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.28

மாகாண மட்ட ஆங்கில தினப்போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் யாவும் நாளை புதன்கிழமை திருகோணமலையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

எனினும், நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக இப்போட்டிகள் பிற் போடப்பட்டுள்ளதாகவும், இவை பற்றிய விவரங் கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் வடம ராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித் துள்ளார். (8-204)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடை பெற ஏற்பாடாகியிருந்த சங்கத்தின் வருடாந் தப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத் தால் மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக சங்கத்தின் தலைவர் சூ.சிறில் அறிவித்துள்ளார்.

இதேசமயம், நாளை புதன்கிழமை நடைபெற விருந்த ஒளிவிழா நிகழ்வுகளும் நடைபெற மாட்டாது என்று சங்கம் அறிவித்துள்ளது. (8-17)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி யின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் ஜன வரி 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்குக் கல்லூரியின் கே.ரி.ஜோன் மண்டபத்தில் டாக்டர் மு.தங்கராஜா தலைமை யில் நடைபெறவுள்ளது. (8-202)

## கடற்கொந்தளிப்பினால் சுழிபுரம் மீனவரும் பாதிப்பு

வட்டுக்கோட்டை,டிசெ.28

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடற்கொந் தளிப்பால் சுழிபுரம் மீனவர்களின் படகுகள், வலைகள் போன்றவை சேதமடைந்தன.

கடற்கொந்தளிப்பினால் கடலில் தரித்து நின்ற மீன்பிடி இயந்திரப் படகுகள், வள்ளங் கள், கட்டுமரம், மிதவைகள் களங்கண்ணி வலை கள் என்பன கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

சுளிபுரம், சவுக்கடி, கருங்கடல் என்பவற் றில் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளி களின் உடைமைகளே சேதமடைந்துள்ளன. இதனால் சுமார் 75 லட்சம் ரூபா வரை இத் தொழிலாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடற்கொந்தளிப்பினால் திருவடிநிலை வைரவர் கோயில் மற்றும் கிரியை மண்டபம் என்பனவும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள் ளதாக இப்பகுதிக்குச் சென்று வந்த கடற் றொழிலாளர் தெரிவித்தார். (8-161)


## தேவை

தையல் வேலை தெரிந்த
ஆண்கள் தேவை.
தொடர்பு: 0777 111486
021 222 3092.
(40145)

## C.C.A. சுன்னாகம்

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
By. Mr.K.Nishanthan (Dip.in Eng.)
ஆரம்பம்: 30-12-2004 (வியாழன்)
திங்கள், வியாழன் 3.00 p.m.
பிரிவு II திங்கள், வியாழன் 6.00p.m.
(மாலை வகுப்புகள்)
(40134)

## SUBRA (14)

சித்தன்கேணி

❖ ஆங்கில மொழி மூலமான வகுப்புகள் தரம் 6,7,8 பிரிவுகளுக்கு ஆங்கில மொழி துறைசார் அறிவுமிக்க அறிஞர்களின் போதனை வெற்றிகரமான 3ஆவது ஆண்டில் ஆங்கில மொழி மூலமான வகுப்புகள்
❖ மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகளும் மீட்டல்களும் நடத்தப்படும்.
❖ ஆங்கில மொழி மூலமான மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி ஆங்கில இலக்கியம்
தரம் 10, 11 வகுப்புக்களுக்கு நடைபெறுகின்றது.

ஆசான் திரு.சுப்பிரமணியம்
உங்கள் குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
என்றும் உங்களுடன் SUBRA இணைந்திருக்கும்.

(26-11-19) (சி-39873)

## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோயில் அருகில்
நாவலர் றோட்.
யாழ்ப்பாணம்.

இணுவில் மத்திய கல்லூரி அருகில்
கே.கே.எஸ்.றோட்.
இணுவில்

(இரு இடத்திலும்)

A/L 2007 கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: ஜனவரி 2இல்.

இன்றிலிருந்து உங்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.

| A/L 2007 | யாழ்.நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | ம்குந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P. சர்மா | R.P. சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| நாடகம் | சுகந்தன் | சுதன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | ரஜீவன் | ரஜீவன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

A/L 2005, A/L 2006 பிரிவு I, பிரிவு II
வழமையான நேரப்படி நடைபெறுகின்றன.

(40143)(26-11-19)


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை குணசிங்கம்

(முன்னாள் ஐக்கிய வியாபாரச்சங்க, முகாமையாளர், இயந்திரம்ஸ்,ஓட்டோ சப்ளே முகாமையாளரும்)



கலட்டியைப் பிறப்பிடமாகவும் இல. 44 /2, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குணசிங்கம் (25.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் , காலஞ்சென்ற குலசிந்தாமணி யின் (ஓய்வுபெற்ற ஆசிரியர். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசையா-தங்கம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, திருஞானசெல்வம் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும். சோதிராசா, வள்ளிநாயகி, பத்மாவதி, (ஓய்வுபெற்ற ஆசிரி யர்-வேலணை), காலஞ்சென்ற குலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும். வரதராஜன், பரிமளாதேவி (ஜேர்மனி), சயந்தன் (ஜேர்மனி), ஜனார்த்தன் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் வரதலக்சுமி, தம்பையா (ஜேர்மனி), ராணி, (ஜேர்மனி), ரதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஜேர் மனியில் வசிக்கும் நிரோசன் ஜானுசன், சுகிந்தன் ஆகியோரின் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2004) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று , பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.44 / 2, மணல்தறை லேன்,
கந்தர்மடம்.
(40152)(12-19-11)

தகவல் :
கு.வரதராஜன் (மகன்).

### பீஸ்மன் ராம்குமார்

(ஆசிரியர் - இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட பீஸ்மன் ராம்குமார் 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரண மானார்.

அன்னார் பீஸ்மன் - ஜானகி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் பூரணச்சந்திரா(காணிப் பதிவு அலுவலகம், கச்சேரி-யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், பவித்திரா வின் அன்புத் தகப்பனாரும் வாசுகி(கனடா), ஜனகன், காலஞ்சென்ற சசிகலா ஆகியோ ரின் அன்புச் சகோதர னும், காலஞ்சென்றவர்களான முத்துக் கிருஷ்ணன் - நேசபூபதி தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2004) செவ்வாய்க் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 132, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(40151)(12-11-19)

தகவல்:
தந்தை.


## YEAR END SPECIAL OFFER

COMPUTER LANGUAGE & ACCOUNTING
ஆண்டிறுதி சிறப்புச் சலுகை
SELECT ANY COURSE PAY 3,900/- ONLY



Diploma in MS Office (MSO)
Diploma in Computer Studies (DICS)
Diploma in Computer Programming (DCP)
Diploma in Desktop Publishing (DTP)
Diploma in Web Design (DWD)
Diploma in Computerised Accounting (DCA)

மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும்

ASIAN COMPUTER SYSTEMS

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். © 021-222 5677
108,K.K.S.வீதி.சுன்னாகம் [illegible] Motors (மேல் மாடி) © 071-2501589
கொடிகாமம் வீதி நெல்லியடி. (கரவெட்டி சுகாதாரத்துக்கு முன்பாக) © 077-3122198
கணனி கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் சீற்றம் காரணமாக கடற்படையின் 6 தளங்கள் சேதம்

கடற்கொந்தளிப்பு காரணமாக கடற்படையின் 6 கடற்படைத் தளங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இதனைத் தவிர, தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 10இற்கும் மேற்பட்ட இராணுவ மற்றும் விசேட அதிரடிப் படைமுகாம்களும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையின் காலி, மாத்தறை, தங்காலை, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை கடற்படைத் தளங்கள் முற்றாக சேதமடைந்துள்ளது என்பதைப் பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலின் படி 23-2ஆவது படைப பிரிவு தலைமையகம் (கல்குடா), நாகர்கோவில், பருத்தித்துறை, மணற்காடு, மாங்கேணி, காயாங்கேணி, கிண்ணியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டு தரைமட்டமாகியுள்ளதாக அந்த அறிவித்தல் தெரிவிக்கின்றது.

இருந்த போதிலும் அந்த அறிவித்தலில் மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம், அறுகம்பை, உல்லை ஆகிய இடங்களிலுள்ள அதிரடிப்படை முகாம்கள், கல்குடா பொலஸ் நிலையம் ஆகியவை கடலில் மூழ்கடிக்கப்பட்ட விடயம் உள்ளடக்கப்படவில்லை.

50 இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காலித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கடற்படையின் பராக்கிரமபாகு யுத்தக் கப்பல் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதற்கிடையில் கடற்கொந்தளிப்பு அனர்த்தம் காரணமாக தெற்கில் குறைந்தது 3,000 பேர் வரையாவது உயிரிழந்திருக்கலாம் என தவல்கள் தெரிவிக்கின்றன.

பஸ் வண்டிகளிலும் ரயிலிலும் பயணம் செய்தவர்களும் பரவலாக கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்கள். தென் மாகாணத்திலேயே இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பு துறைமுகத்திற்கு வெளியே நிறுத்திவைக்கப்பட்டிருந்த பங்களாதேஷ் கப்பலொன்றும் கடலில் மூழ்கியுள்ளது. மேலும் அதிகாரி உட்பட 15 மாலுமிகள் காணாமற் போயுள்ளார்கள்

கிக்கடுவை, தங்காலை, நிலாவெளி, கல்குடா, அறுகம்பை ஆகிய இடங்களிலுள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களில் தங்கியிருந்த 50இற்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் மரணமடைந்துள்ளார்கள் அல்லது காணாமல் போயுள்ளார்கள் என தெரியவருகின்றது.

## சுனாமி என்றால் என்ன?

யாழ்ப்பாணம்,டிசெ.28

கடலுக்கடியில் ஏற்படும் பூகம்கம்பத்துக்கு சுனாமி என்று பெயரிடப்பட்டுள்ளது. இது ஒரு ஜப்பானியச் சொல். அதன்பொருள் "துறைமுக அலைகள்" என்பதாம்.

பெருங் கடலுக்கடியில் அல்லது அருகில் பூமியின் மேற்பாகத்தில் ஏற்படும் திடீர் எழுச்சி அல்லது வீச்சினால் இது ஏற்படுவதாகக் கருதப்படுகின்றது.

சுனாமியில் தோன்றும் அலையானது ஒருதனி அலையாகவிருக்காது, தொடர் அலைகள் பெருங் கடலின் பெரும் பகுதிக்கும் மணிக்கு 500 மைல் வேகத்தில் செல்லக் கூடியவை.

ஆரம்பத்தில் ஒருசில சென்ரிமீற்றர் அல்லது மீற்றர் அளவிலேயே தோற்றம் ளிக்கும் இவ்வலைகள் ஆழம்குறைந்த கரையோரங்களை அண்மிக்கும்போது அலைகளின் உயரம் வேகம குறையும். ஆனால் அதன் உயரம் அதிகரிக்கும், சிலசமயம் அலைகளின் உயரம் 30முதல் 40மீற்றர் அளவுக்கு உயர்ந்து பயங்கர வேகத்தில் கரைப்பகுதிகளைத் தாக்கும். (ப-8)

# 'சுனாமி' கடலடிப் பூகம்பத்தை அவதானித்த அமெ.விஞ்ஞானி!

## உடன் சமிக்ஞை விடுக்க முடியவில்லையாம்!!

சுனாமி கடலடிப் பூமியதிர்ச்சியை லொஸ் ஏஞ்சலில் அதானித்த அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் எச்சரிக்கை சமிக்ஞைகளை வெளிப்படுத்துவதற்குப் பெரும் முயற்சி எடுத்துள்ளார். ஆனால்; முடியாமற் போய்விட்டது எனத் தெரியவருகிறது.

பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையத்தில் உள்ள இந்த அதிகாரி முதலில் சுனாமி பூமி அதிர்ச்சி ஏற்பட்டதை அவதானித்துவிட்டு, அதுபற்றிய எச்சரிக்கைகளை அனுப்புவதற்குப் பெரிதும் முயற்சிசெய்துள்ளார். ஆனால், எச்சரிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான அமைப்பு அப்பகுதியில் இருக்கவில்லை என்று ஹொனலுலுவிலுள்ள பெருங்கடல் காலநிலை நிர்வாகத்தலத்தின் பணிப்பாளர் சாள்ஸ் மெக்கிறீரி தெரிவித்தார்.

### இலங்கையை அடைய எடுத்த நேரம்

பூகம்பம் ஏற்பட்ட இடத்திலிருந்து கடல் அலைகள் இலங்கையைச் சென்றடைவதற்கு ஒன்றரை மணிநேரம் பிடித்ததாக அவர் கூறினார். தாய்லாந்து, மலேஷியா நாடுகளைச் சென்றடைய ஒருமணிநேரம் பிடித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

1900ஆம் ஆண்டுக்குப்பின்னர் 1964ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல் பூகம்பங்களுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய கடல் பூகம்பம் இதுவாகும். சுனாமி சென்றபாதைகளில் காணப்பட்ட நிலப்பரப்புகள் அனைத்தையும் அடித்து நொறுக்கியுள்ளது. 3,728 மைல் தொலைவிலுள்ள ஆபிரிக்கக் கரைவரைக்கும் அலைகள் சென்று தாக்கியுள்ளன. (ப-8)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். மாநகர சபையும் உதவி

வடக்கு-கிழக்கு மாகாணத்தைத் தாக்கிய சுனாமி கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, யாழ்ப்பாணம் மாநகர சபையானது தனது நிவாரணப் பணிகளைச் செய்கின்றது.

மாநகரசபை ஊழியர்கள் அனைவரும் தங்களது ஒருநாள் சம்பளத்தை இந்த நிவாரணத்திற்காக வழங்கியுள்ளனர். அவற்றைவிட, யாழ்ப்பாண மாநகரசபையில் இயங்குகின்ற தொழிற்சங்கங்களான, பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம், வடக்கு-கிழக்கு மாகாண அரச பொது (சிற்) ஊழியர் சங்கம், வடக்கு-கிழக்கு மாகாண ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம் என்பனவற்றோடு, யாழ். மாநகரசபை நலன்புரிச் சங்கம், யாழ். மாநகரசபை சுகாதாரப்பகுதி நலன்புரிச் சங்கம், யாழ். மாநகரசபை சைவசமய விவகாரக்குழு என்பனவும் இணைந்து இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான உலர்உணவுப் பொருள்களைப் பருத்தித்துறை, கரவெட்டி, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளுக்கு நேற்று அனுப்பியுள்ளது.

இந்த உலர்உணவில், அரிசி, சீனி, பருப்பு, பால்மா வகைகள், பிஸ்கற்றுக்கள் என்பன அடங்கியுள்ளன. அத்துடன், பளை, கரவெட்டி ஆகிய பகுதிகளுக்கு மாநகர சபையின் இரண்டு தண்ணீர் பௌசர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (8)

## படைச்சிப்பாய் புலிகளால் காப்பாற்றப்பட்டார்

வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கரையேறிய சிறிலங்கா படைச் சிப்பாய் ஒருவரை விடுதலைப் புலிகள் மீட்டு அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கல்லடி சிறிலங்கா படை முகாமைச் சேர்ந்த ஏ.டி.வசந்த என்ற இராணுவச் சிப்பாயே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவராவார்.

இதேவேளை, கடல் பெருக்கெடுத்ததால் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இலங்கைப் படைத்தரப்பு வருவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியிருந்தனர். (8)

## ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோருக்கு உலர் உணவு மற்றும் உடுபுடைவைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.28

வடமராட்சி மற்றும் கரையோரப் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கடல் கொந்தளிப்பில் சிக்கி படுகாய மடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் பொதுமக்களுக்கு குடாநாட்டு மக்கள் உலர் உணவுகள், உடுபுடைவைகள் என்பவற்றை வழங்கிவருகின்றனர்.

இயற்கை அனர்த்தத்தில் சிக்கிய தாளையடி மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு குடாநாட்டிலிருந்து புலம்பெயர்ந்து தற்போது தாயகம் வந்துள்ளவர்களும், யாழ்.நகரப்பகுதியிலுள்ள சில உணவகங்கள் மற்றும் பொது அமைப்புக்கள், தொண்டர் நிறுவனங்கள் என்பனவும் உணவு, உலர் உணவு, உடுபுடைவைகள் என்பவற்றை வழங்கி வருகின்றனர். (ஐ-7-6)

## தென்னாசிய நாடுகளில் பலியானோர் எண்ணிக்கை

கடற்கொந்தளிப்பினால் பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை இலங்கையிலேயே அதிகம் என்ற விவரம் தெரியவந்துள்ளது. நேற்று நண்பகல்வரை கிடைத்த விவரம் வருமாறு:-

இலங்கையில் 4,500பேர்
இந்தோனேஷியாவில் 4440பேர்
இந்தியாவில் 3,200பேர்
தாய்லாந்தில் 380 பேர்
மலேஷியாவில் 42பேர்
மாலைதீவுகளில் 32பேர்
பங்களாதேஷ் 2பேர் (ப-8)

# பாதிக்கப்பட்டோருக்கு உதவ ஐரோப்பிய நாடுகள் முன்வருகை

கொழும்பு,டிசெ.28

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவுவதற்கு நோர்வே மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளும் முன்வந்துள்ளன.

நோர்வே 160 மில்லியன் ரூபாவும், ஐரோப்பிய யூனியன் 4 மில்லியன் யூரோ நாணயத்தையும் வழங்க முன்வந்துள்ளது. இந்தியா 4 கப்பல்களில் உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது.

இதனைத தவிர இந்தியா மீட்பு பணிகளுக்காக 6 கடற்படைக் கப்பலகளையும் 6 ஹெலிகொப்டர்களையும் அனுப்பி வைத்துள்ளது.

இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக வெளிநாட்டு பிரஜைகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். களுத்துறை பிரதேசத்திலுள்ள உல்லாசப் பயணிகள் விடுதியில் தங்கியிருந்த 2 ஐரோப்பிய பிரஜைகள் காணாமல் போயுள்ளார்கள்.

ரஷ்யா மீட்புப் பணிகளுக்காக 9 ஹெலிகொப்டர்களை வழங்க முன்வந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க பொலீஸ் மற்றும் முப்படையினரின் விடுமுறைகள் மறுஅறிவித்தல் வரை ரத்துச்செய்யப்பட்டுள்ளது. விடுமுறைகளில் வீடுகளுக்குச் சென்றவர்கள் உடனடியாகப் பணிக்குத்திரும்புமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (8)

## தென் ஆசிய நாடுகளில் 12 ஆயிரம் பேருக்குமேல் பலி!


கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பத்தின் காரணமாக தென் ஆசிய நாடுகளின் கரையோரப் பகுதிகளில் இறந்தவர்களின் தொகை 12ஆயிரத்துக்கும் அதிகமெனத் தெரியவந்துள்ளது.

கடற்கொந்தளிப்பினால் இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை விவரங்கள் நிமிடத்துக்கு நிமிடம் மாறிக் கொண்டே இருக்கின்றன.

40 வருடங்களில் உலகத்தில் பல இடங்களிலும் ஏற்பட்டுள்ள மிகமோசமான பூமி அதிர்ச்சியென்று கருதப்படும் இதன் தாக்கம் முதலில் 8.9 அளவில் இருந்ததாகக் கூறப்பட்ட போதிலும் பின்னர் 9.0 அளவில் இருந்ததாகப் பதியப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் 4,440பேரும் இலங்கையில் 4,500 பேரும் இந்தியாவில் 3,200 பேரும் கடற்கொந்தளிப்பினால் மரணமாகியிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. (ப-8)

## 'சுனாமி' கடல் பூகம்பம் தாக்கிய நாடுகளும், தீவுகளும்




"சுனாமி" கடல் பூகம்பம் ஆரம்பமான சுமாத்திராத் தீவின் முனைப்பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

டொல்பின் வான் (56xxxx) A/C Radio Set, Full Seats New Engine மற்றும் MD 90 மோட்டார் சைக்கிள் (GCxxx) விற்பனைக்குண்டு. தொடர்பு சுவக்கீன்பிள்ளை, 4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. 222 3679 or 011 2714135. (40135)

## அறை வாடகைக்கு

பல்கலைக்கழக மாணவிகள், அரசதுறையில் கடமைபுரியும் பெண்கள் இருவர் தங்கியிருப்பதற்குரிய அறை பொஸ்கோ பாடசாலைச் சூழலில் வாடகைக்குண்டு. தொடர்பு: விள. இல.2462, மே/பா உதயன். (40156)

## தவறிவிட்டது

ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த பசுபதி பரமானந்தம் என்பவரது தேசிய அடையாள அட்டை (441322160V) 23-12-2004 அன்று யாழ். ஹற்றன் நஷனல் வங்கிக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 13, 14, ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ, பெரிய கடை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 0776354911. (40160)

## அவசர கலந்துரையாடல்

மன் பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கடல் வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும் சகமாணவர்களுக்கும் உதவும் வகை பற்றி கலந்துரையாடவிருப்பதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்றம் கேட்டுள்ளது. (8-204)

## கொள்ளைகளைத் தடுக்க ஊரடங்கு

கடல் அலைகளால் பாதிக்கபட்டுள்ள பகுதிகளில் பொருள்களைக் கொள்ளையடிப்பவர்களைத் தடுக்கும்பொருட்டு சில பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கு 100 மைல் தூரத்திலுள்ள மாத்தறையில், நூற்றுக்கணக்கான மக்கள் சந்தையில் பொருள்கள் வாங்குவதில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் திடீரெனத் தோன்றிய கடல் அலைகள் அவர்களை அடித்துச் சென்று விட்டதாகவும் பொலீஸ் அதிகாரி சந்தன விக்கிரமரட்ண என்பவர் கூறியுள்ளார். அந்த மக்களுககு என்ன நேர்ந்தது என்றே தெரியவில்லை என்றார் அவர். (ப-8)


## றஞ்சிதா வைத்தியசாலை

சுதுமலை மத்தி, மானிப்பாயில் இயங்கும் இந்த வைத்தியசாலையின் கிளை காலை 9மணி முதல் பி.ப ஒரு மணிவரை K.K.S. வீதி, சுன்னாகம், பெரதேனியா பல் சிகிச்சை நிலையத்தில் இயங்குகின்றது. இங்கு சகல நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

விசேடமாக இங்கு FACIAL (முகம் சம்பந்தப்பட்ட சகல நோய்) செய்யவிரும்புவோர் முன்கூட்டியே தொடர்புகொண்டு திகதியை உறுதிப்படுத்தவும். நெற்றி மயிர் கொட்டுதலுக்கும் முகத்தில் முடி வளருதலுக்கும் விசேட சிகிச்சை அளிக்கப்படும்.

மாலை 4மணிமுதல் இரவு 7மணிவரை டச் வீதி, உடுவிலில் சிகிச்சை நடைபெறும்.

தொடர்புகளுக்கு:
தொ.பே.இல. 0712 - 299258
(40158) 077 - 6240041


## மரண அறிவித்தல்

### பொன்னையா வேலும்மயிலும்

(வேலு)

(பரு. இலங்கைவங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

தரக்கம்பரை கிராமக் கோட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வேலும்மயிலும் ஞாயிற்றுக்கிழமை (26.12.2004) அன்று காலமானார்.

அன்னார் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் பாலநந்தினி, காண்டீபன், அச்சுதன், யோகவேல், யோகவேணி, யோகமயிலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரியின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2004) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினா, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
தரக்கம்பரை, குடும்பத்தினர்.
புலோலி தெற்கு. (சி-40067)(26-14-46)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை கணனிப் பயிற்சி நிலைய விண்ணப்பம் கோரல்

01. Diploma in MS-Office - 5Months (Information Technology, Microsoft Windows, Word, Excel, Access & Power Point)
02. Diploma in Desk Top Publishing - 4 Months (Information Technology, Pagemaker, Corel Draw & Photo Shop)
03. Computer Programming Course (Visual Basic, C/C++ Java) Each Programming Course - 3 Months 1500/=

புதிய பிரிவுகள் ஆரம்பம் 15.01.2005, பதிவுக்கட்டணம் 200 ரூபா, பயிற்சிக்கட்டணம் ஓர் அலகுப் பிரிவிற்கு 600ரூபா.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
இல. 12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 2324

செயலாளர்,
யா.மா.கூ.சபை.
(C/40064)(12-14-46-26)

## கண்ணீர் அஞ்சலி



26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் அனர்த்தத்தின்போது கீரிமலையில் அகாலமரணமான யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்

### இராசதுரை தயாபரன்

(காளி கோயிலடி, மல்லாகம்)

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தொழில்நுட்பக்கல்லூரி,
செயல்முறை ஆசிரியர்கள்.
(40168)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி தரம் I அனுமதி - 2005

2005 தொடக்கம் தரம் I வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் உரிய படிவத்தைக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 03-01-2005**

கந்தரோடை
சுன்னாகம். (40136)(12-14-46-26) - அதிபர்.

## வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் பிற்போடல்

இன்று (2004-12-28)ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவிருந்த யாழ்பாணம் ப.நோ.கூ.சங்கத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதைச் சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கூட்டுறவுச் சேவையில்,
தலைவர். (சி-40065)(26-14-46) செயலாளர்.

## ஒளிவிழா, பிரிவுபசார விழா, வருடாந்த ஒன்றுகூடல் பிற்போடல்

எமது பிரதேச செயலகத்தில் இன்று (28.12.2004) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த ஒளிவிழா, நாளை (29.12.2004) புதன்கிழமை நடைபெறவிருந்த பிரிவுபசார விழா, வருடாந்த ஒன்றுகூடல் என்பன தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றோம்.

தலைவர்
நலன்புரிச் சங்கம்.

பிரதேச செயலகம்,
வலி.வடக்கு, தெல்லிப்பழை.
(40162)(46-14-26)

## மரண அறிவித்தல்

| முத்துக்கிருஷ்ணன் அற்புததேவன் | அற்புததேவன் காங்கேசன் | அற்புததேவன் யதீசன் |
|---|---|---|
|  |  |  |

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்கிருஷ்ணன் அற்புததேவன், அற்புததேவன் காங்கேயன், அற்புததேவன் யதீசன் (கலைப்பிரிவு மாணவன் - 2005 இணுவில் இந்துக்கல்லூரி) ஆகியோர் 26-12-2004 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் அகாலமரணமானார்கள்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (28-12-2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தாவடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்கள் தாவடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில். (சி-40066)(26-14-46)
மனைவி, பிள்ளைகள், உறவினர்.

## கண்ணீர் அஞ்சலி

26.12.2004 அன்று இலங்கையில் ஏற்பட்ட கோர அலை அரக்கனின் கரங்களில் சிக்கி கடலோடு காவியமாகிய

### முத்துக்கிருஷ்ணன் அற்புததேவன், அற்புததேவன் காங்கேசன், அற்புததேவன் யதீசன்

இவர்களின் உற்ற தோழன் **ந.பிரகலாதன் (கண்ணன்)**

இவர்களின் மறைவால் மனம்பதறி நிற்பதோடு இவர்களின் பாதங்களில் எமது கண்ணீரால் அஞ்சலி செய்கின்றோம்.

தமிழ் பூங்கா அச்சகம்
நெல்லியடி.
(40164)(12-14-46-26)

## கண்ணீர் அஞ்சலி

யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலய

முன்னாள் உபஅதிபர்

### க.வை.தனேஸ்வரன்

26-12-2004 அன்று இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தில் காலமான செய்திகேட்டு துயரடைவதுடன், அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருடைய துயரில் நாமும் பங்குகொண்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
கல்விசாரா ஊழியர்கள்.
(சி-40088)(26-14-46)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1943 |  | 2004 |
| - | | - |
| 07 | | 11 |
| - | | - |
| 21 | | 29 |

### அமரர் மயில்வாகனம் செளந்தரேஸ்வரி

(அத்தாய் - பூநகரி)

எங்கள் குடும்பத் தெய்வம் எம்மைவிட்டு
மறைந்த செய்தியினைக் கேள்வியுற்று உடனே
எமது இல்லம் நாடி ஓடோடி வந்து கண்ணீர்
சிந்திய முகத்துடன் எமக்கு ஆறுதலும் தேறுதலும்
கூறி, பல வழிகளிலும் உதவிகள் பல புரிந்த
அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும்
அனுதாபச் செய்திகள் அனுப்பிய
அனைத்து உள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி
பிரசுரித்த அன்பானவர்களுக்கும்
இரங்கற் செய்திகளைத் தந்துதவியவர்களுக்கும்
அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட
அன்பிற்குரிய உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் இதயபூர்வமான
நன்றிகளை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (29-12-2004) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்நது நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
அத்தாய்,
பு.நகரி. (சி-40087)(26-14-46)
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## 8ஆம் ஆண்டு நினைவுகளில்.....

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 04 |  | 26 |
| - | | - |
| 02 | | 12 |
| - | | - |
| 1950 | | 1996 |

### திருமதி கந்தசாமி இராசம்மா (ராஜம்)

அன்பின் திருவுருவாய்
அகிலத்தில் ஒளிவிளக்காய்
அன்பு காட்டி அரவணைத்து
எம் வாழ்வுக்கு வழிகாட்டிய அம்மா
மண்ணக வாழ்வில் விரக்தி கொண்டா
நீங்கள் விண்ணில் வாழப் புறப்பட்டீர்கள்?
விண்ணக வாழ்வில் எட்டு வருடங்கள் ஆகிடினும்
மறக்காது எம் நெஞ்சம்!

*ரஜினி மகால்.*
*சமரபாகு.*
*வல்வெட்டித்துறை.*
- குடும்பத்தினர்.
(40161)(12-14-46-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பேரவலக் காட்சிகள்...

பிஞ்சுப் பாலகர்களையும் விட்டுவைக்காத கடற்பெருக்கம்










சடலங்கள் மீட்கப்பட்டபோது...







இயற்கை அனர்த்தத்தின் கொடூரக் காட்சிகள்







பாறிவீழ்ந்த மரமொன்றினுள் அகப்பட்டு உயிரிழந்த ஆடு.



படங்கள்: சேந்தன், காந்தரூபன்











பலத்த சேதமடைந்த மினிபஸ் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோட்டறக்ட் கழக உறுப்பினர்களுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.28

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக சகல றோட்டறக்ட் கழக உறுப்பினர்களையும், உடு புடைவைகள் மற்றும் உலர் உணவுவகைகளைச் சேகரித்து 'உதயன்' பணிமனையில் ஒப்படைக்குமாறு யாழ்.றோட்டறிக் கழக செயலாளர் கேட்டுள்ளார்.

(எ)

## கண்ணீர் அஞ்சலி



**முத்துக்கிருஷ்ணன் அற்புததேவன் (மாயவன்)**
**அற்புததேவன் யதீசன்**
**அற்புததேவன் காங்கேசன**

ஆகியோரின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (சி-40071)(29-43-11-14) -கிருஷ்ணா பிறிண்டேர்ஸ்.

## அகில இலங்கை டி.ஏ.எம். பட்டதாரிகள் வைத்திய சங்கத்தின்

## அவசர வேண்டுகோள்

19.12.2004 ஆம் திகதி நடைபெற்ற சங்கப் பொதுக்கூட்டத்தில் வருட சந்தா அபிவிருத்தி நிதிக்கு என ரூபா இரண்டாயிரத்து எழுநூறு (2700/=) எனத் தீர்மானிக்கப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

அவசர தேவை கருதி 30.12.2004 ஆம் திகதிக்கு முன்பதாக *Dr.K.நவரத்தினம், 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம* என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: சகல D.A.M. பட்டதாரிகளும் பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்களும் இவ்வறிவித்தலைத் தவறாது ஏற்று ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

Dr.செ.பரமசிவம்பிள்ளை — Dr.SJ.சிங்கஅரியரத்தினம்
தலைவர். (40173)(29-43-11-14) — செயலாளர்.

# மரண அறிவித்தல்கள்

## இராஜேந்திரம் நிஷாந்தன்



மல்லாகம்காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் நிஷாந்தன் 26.12.2004 அன்று கீரிமலையில் அகாலமரணமானார்.

அன்னார் இராஜேந்திரன்-சிவமலர் தம்பதிகளின் ஏகபுத்திரனும் சியாமளா (நெதர்லாந்து), மஞ்சுளா (யாழ்.பல்கலைக்கழகம்), லக்சனா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று பி.ப. ஒரு மணியளவில் மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*மல்லாகம்.*
(40184)(43-11-14)

தகவல்:
சி.இராஜேந்திரம் (தந்தை)
(உரிமையாளர், நிஷாந்தன் கடைச்சல் தொழிலகம்).

## கருணாநந்தன் தையல்நாயகி

(குஞ்சு அக்கா)



நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கருணாநந்தன் தையல்நாயகி 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான P.T.தம்பு (மாஸ்டர்) - சுந்தரவல்லியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி ஐயாத்துரை - திருமதி ஐயாத்துரையின் மருமகளும் அமரர் Dr.கருணாநந்தனின் அன்பு மனைவியும் (அமரா) நல்லநாயகி, (அமரர்) பரமேஸ்வரி, (அமரர்) சேனாதிராசா, (அமரர்) ஜெகதீஸ் (ராசாத்தி), புவனேஸ்வரி, யோகேஸ்வரி, (அமரர்) இந்திரன், (அமரர்) தில்லைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் (அமரர்) கைலாசபிள்ளை, பத்மாவதி, (அமரர்) சேவையர் யோகரட்ணம், சத்தியநாதன் (இளைப்பாறிய உத்தியோகத்தர் State Bank of India), (அமரர்) மாஸ்ரர் பரமேஸ்வரன், (அமரர்) கௌரி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நளாயினி, (அமரர்) சந்திரமௌலி, பாலகுமார், திருமகள் ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணநாயகம், சித்திரா, உமாசங்கர் ஆகியோரின் மாமியாரும் அம்பிகா ஈழவேந்தனின் சிறிய தாயாரும் வ.ஆறுமுகத்தின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2004) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26,சிவகுருநாதர் வீதி,*
*தோப்பு, நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*
(40182)(43-11-14)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

## திருமதி குலோத்துங்கன் தேவகி



உடுவிலைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு, கல்லாறையை வதிவிடமாகவும் கொண்ட குலோத்துங்கன் தேவகி இயற்கை அனர்த்தத்தினால் 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரன் (சாமி) - யோகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் வாசுகி, தயாபரனின் சகோதரியும் மகேந்திரன், யுகசாந்தியின் மைத்துனியும் இராசலட்சுமி, மகேஸ்வரி, ஜெகசோதிமலர், தங்கரத்தினம், சித்திரவேல் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (27.12.2004) திங்கட்கிழமை கல்லாற்றில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விக்னேஸ்வர [illegible]*
(40179)
(43-11-14) *இணுவில்.* T.P.:0776134493

தகவல்:
ஜெகசோதிமலர்
(சிறிய தாய்).

# ஆங்கில தினப் போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த வடக்கு - கிழக்கு மாகாண ஆங்கில தின இறுதிப்போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஐ)

## பட்டதாரி பயிலுநர் ஒன்று கூடல் பிற்போடல்

இன்று காரைநகர் MPCS மண்டபத்தில் இடம்பெற இருந்த பட்டதாரி பயிலுநர்களின் ஒன்று கூடல் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பா.சோமசுந்தரம்
(சி-40072) தலைவர்.


## ENGLISH

தரம் 4 - 11 வரையான ஆங்கில பாட பிரத்தியேக வகுப்புக்கள் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
19A , யாழ் வீதி,
சிறாம்பியடி,
யாழ்ப்பாணம்.
T.P.077 6569806 (40172)


## மாணவர்களிற்கான முக்கிய அறிவித்தல்

கடல்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டிருக்கும் எமது உடன் பிறப்புகளிற்கு உதவிக்கரம் நீட்டும் முகமாக IIS சமூகத்தினரால் விசேட ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன. எனவே, இது தொடர்பான மாணவர்களிற்கான அவசர கலந்துரையாடல் ஒன்று 29.12.2004 காலை 10 மணிக்கு IIS பிரதான மண்டபத்தில் இடம்பெற இருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இயக்குநர்,
(சி-40072) **IIS,** யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## S.K.நடராஜா (காரைநகர்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது **152B,** அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான கந்தையா நடராஜா 27.12.2004 இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி கந்தையா தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற கதிரவேலு ஆறுமுகம் தம்பதிகளின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செந்தூரன், ஜனாகரன் மற்றும் செல்வகுமார், திவாகரன் (புவியியற்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), ராஜேஸ்வரன் கஜபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 152B, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் இன்று (28.12.2004) நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காகக் கோம்பையன்மணல் மயானத்திற்கு ஒரு மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*152B, அரசடி வீதி,* ந. செல்வகுமார்
*யாழ்ப்பாணம்.*(40183)(29-43-11-14) (மகன்).


ராஜா யாழ்ப்பாணம்

❑ அர்ஜுன் ❑ரீமாசென்
❑வடிவேல் ❑தேவயானி
❑பிரகாஷ்ராஜ் நடித்த
இயக்கம் சுந்தர் C
கிரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது.
மம்முட்டி, நந்திதாதாஸ் நடித்த
விஷ்வதுளசி
(ரீலீஸ்)
(சி-39821) தினசரி : 10.30 2.30, 6.30.,9.30 (பு.நே.)

நிறஞ்சனாஸ் சங்கானை
தனுஷ்.பியா நடித்த
ட்ரீம்ஸ்
(ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
THE MUMMY RETURNS

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ❑ அர்ஜுன் (இருவேடம்)
❑ சாயாசிங் ❑ லைலா
❑ வடிவேல் நடித்த
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00(பு.நே.)
ஜெய் சூர்யா
(C/29684)




# மரண அறிவித்தல்கள்

## நல்லையா பிரகலாதன் (கண்ணன்)



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பிரகலாதன் 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் (அமரர்) நல்லையா - சொர்ணம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் நித்தியகலா, குமுதினி, மாலினி (அமரர்), ரஜனி, வதனி (அமரர்), தர்ஷலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசலிங்கம், மனோகரன், ஆனந்தராஜா, மோகனதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆர்த்திகா, மதுராங்கன், அர்ச்சனா, கஜானி, பிரஷாந்த், காயத்ரி, அருண், அபிரா, லக்ஷா, விதுஷா, ஷருண் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2004) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.* (40174)(43-11-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மூத்ததம்பி சண்முகம்



நுணாவில் மேற்கைச் சேர்ந்த மூத்ததம்பி சண்முகம் (ஓய்வுபெற்ற அரச எழுதுவினைஞரும், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் வரி இறுப்பாளரும்) நேற்று (27.12.2004) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் வரதலிங்கம் (ராசா), அற்புதமலர் (ரஞ்சி), புஸ்பமலர் (சந்திரா), சரோஜினிதேவி, கருணலிங்கம் (மோகன் - டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுருநாதன், பரஞ்சோதிநாதன், அமரர் செல்வநாதன், சந்திராதேவி, மஞ்சுளாதேவி (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் கஷ்தூரி, மதன், சிந்துஜா, அஜித்தா, கண்ணன், சுஜித்தா, சுபன், பார்கவி, நிஷான், நர்மதா, நிஸானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை குச்சப்பிட்டி மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.* (40178)(43-11-14)

தகவல்:
பரஞ்சோதிநாதன் (மருமகன்).

## சண்முகம் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்

**(களுமாத்தயா காலி J.P. பெட்டா ஏஜென்சி, மாணிக்கம்ஸ், பெட்டா குறூப் அதிபர்)**

சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் 26.12.2004 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சின்னத்தம்பி பார்பதியின் அன்பு மகனும் நித்திய லெட்சுமியின் அன்புக் கணவரும் புளியங்கூடல் தில்லையம்பலம் - பரமேஸ்வரியின் அன்பு மருமகனும் அன்னலெட்சுமி, சரஸ்வதி, முருகானந்தம் (காலி), சிவானந்தராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொட்டு), மோகனதாஸ், தர்மதேவி ஆகியோரின் அருமை மைத்துனரும் லவராசா (கொழும்பு இந்துக் கல்லூரி), சிறிறங்கினி (வேம்படி மகளிர் கல்லூரி), நர்மதி (வேம்படி மகளிர் கல்லூரி), நந்தனன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் ஆசை அப்பாவும் புஸ்பராஜா, தவராஜசிங்கம், குமரகுருபரன் (லண்டன்), ஜெயராசா (லண்டன்), தவரூபன், கமலதாஸ், கண்ணதாஸ், விமலதாஸ், ரஜனி (யாழ்.பல்கலைக்கழகம்), விஜிதா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விசயலட்சுமி, வைத்தியநாதன், (ரஷ்யா), பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும் புளியங்கூடல் சுந்தரலிங்கத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*128, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-40070)(43-11-14)

தகவல்:
முருகானந்தம் (தம்பி).

## திருமதி சிவபாக்கியம் சின்னத்துரை (சங்கானை)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் சின்னத்துரை அவர்கள் நேற்று (27.12.2004) திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் (பிரபல புகையிலை வியாபாரி) அன்பு மனைவியும் வைரவநாதன் (ஓய்வுபெற்ற புகையிரத எழுதுவினைஞர்), காலஞ்சென்ற சினத்தங்கம் (தங்கமணி), அன்னலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மங்கையர்க்கரசி, விக்னேஸ்வரன் (கனடா), மகாலிங்கம் (கனடா) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், தங்கரத்தினம், சரஸ்வதி மற்றும் மகேஸ்வரி, பரமேஸ்வரி, சத்தியதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் முரளி - ஹேமந்தினி (கனடா), ரமணன் - கெங்காநிதி (கனடா), வசந்தன் - ஜெனனி (கனடா), விபுலன் (கனடா) - பாமினி, தர்சினி - தவராசா (அஞ்சலகம் சங்கானை), பிரதீபன், கல்பனா - பரமானந்தம் (கனடா), வத்சலா - தேவகுமார் (கனடா), மேகலா - ஆனந்தநடேசன் (இத்தாலி), கமலினி - ரூபன் (கனடா), சுதாகரன் - தாரணி (அமெரிக்கா), பிரபாகர் (அமெரிக்கா), நந்தா - அமிர்தன் (கனடா), நக்கீரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சந்தியா, வித்தகன், சாரங்கன், சியாம், கேசிகா, கீர்த்திகா, தீபிகா, துவாரகன், லக்ஸ்மன், பிரியன், ரனீஷா, சௌீனா, அனீஷா, ஈசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2004) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய தபாற்கந்தோர் வீதி,*
*சங்கானை.* (சி-40069)(43-11-14)

தகவல்:
சி.வைரவநாதன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கிலிருந்து மீட்கப்பட்ட 70 சடலங்கள் உறவினரிடம் ஒப்படைப்பு

வடமராட்சி,டிசெ.28

மணற்காடு உள்ளிட்ட வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடற்கொந்தளிப்புக்கு இலக்காகி பலியானோரின் 85 சடலங்கள் கடந்த இருதினங்களிலும் மீட்கப்பட்டுள்ளன. இச்சடலங்களில் 70 சடலங்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏனைய 15 சடலங்கள் அடையாளம் காண்பதற்காக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு வரை 66 சடலங்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அன்றையதினமே 34 சடலங்கள் இனங்காணப்பட்டு ஒப்படைக்கப்பட்டன. நேற்றையதினமும் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டன. அதேநேரம் 36 சடலங்கள் இனங்காணப்பட்டு உறவினரிடம் கையளிக்கப்பட்டன.

பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம் வைத்தியசாலையில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டு சடலங்களை உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார். பருத்தித்துறை பொலீஸாரும் துரிதமாகச் செயற்பட்டு வருகின்றனர். வைத்தியசாலைப் பணியாளர்கள், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும் சடலங்களை அடையாளம் காட்ட உதவி வருகின்றனர்.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் நேற்றையதினம் இரண்டாவது நாளாக இரவு பகலாக ஒலித்துவரும் மரண ஓலங்கள் இதயத்தைப் பிழிவதாக இருந்தன. குழந்தைகளின் சடலங்கள் காண்போரை உடல் பதறச்செய்யும் நிலையை ஏற்படுத்தி வருகின்றன.

மரணமடைந்தோர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் பிள்ளை, தகப்பன் பிள்ளை, சகோதரர்கள், பச்சிளம்பாலகர்கள், இளம்பெண்கள், வயோதிபர்கள் எனப் பல்வேறு வகையினர் அடங்குவார்கள்.

மரணச் செலவுக்காக யாழ்.அரச அதிபரின் ஏற்பாட்டில் தலா இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றன. இரண்டு சின்னஞ்சிறு குழந்தைகளைப் பலிகொடுத்த ஓர் இளம் குடும்பஸ்தரிடம் 4 ஆயிரம் ரூபாவை அரச உத்தியோகத்தர்கள் வழங்கியபோது, "எனது செல்வங்கள் இல்லையாம் இனி எதற்கையா இந்தக் காசு?" என அழுதுகுழறினார்.

சவச்சாலையில் சடலங்களைப் பார்வையிடவும் அடையாளம் காண்பதற்காகவும் எந்நேரமும் அதிக சனக்கூட்டம் காணப்படுகிறது. கத்தோலிக்க மதகுருமார்கள், கன்னியாஸ்திரிகளும் அங்கு கூடிநின்று பாதிக்கப்பட்டோர்களுக்கு ஆறுதல் கூறுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. (ஐ-173-70)

## ஜனாதிபதி செயலகத்தில் விசேட பிரிவு அமைப்பு


ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்படும் நிவாரண நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கான அவசர ஒருங்கிணைப்புப் பிரிவொன்று ஜனாதிபதி செயலகத்தில் நியமிக்கப்பட்டுள்ளது.

2435082, 4733531, 2437362, 4733427 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக இந்தப் பிரிவுடன் தொடர்புகொள்ள முடியும்.

இந்தப் பிரிவிற்குத் தலைமைதாங்கும் ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரட்ன, அவசர நிவாரப் பணிகள் குறித்து நேற்றுக் காலை விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைத் தளபதிகள், பொலீஸார் மற்றும் இதர உயர்மட்ட அரச அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகளை நடத்தத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் நிவாரணம் வழங்கல் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது.







வடமராட்சி கிழக்கில் உயிரிழந்தோரின் பெருந்தொகையான சடலங்கள் உடுத்துறைப் பகுதியில் தரவை நிலத்தில் புதைக்கப்பட்டன. டிராக்டர்களில் [illegible] சடலங்கள் புதைக்கப்படுவதைப் படங்களில் காணலாம். (பட[illegible])

## மாணவர் அமைப்பு சேர்த்த பொருள்கள் இன்று முல்லைக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு வழங்கவென யாழ். மாவட்ட மாணவர் அமைபினால் சேகிக்கப்பட்ட பொருள்கள் இன்று அங்கு எடுத்துச் செல்லப்பட்டு கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-190)

## லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.28

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் சகல லயன்ஸ் கழகங்கள் மற்றும் அதன் அங்கத்தவர்கள் இணைந்து செயற்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் -

இதன்படி, மனிதாபிமானப் பணிக்கு நன்கொடைகளை அல்லது பொருளுதவிகளை வழங்க விரும்புவோர் 20, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள பிராந்தியப் பணிமனையில் ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஆசிரியர், மாணவர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் ஆசிரிய, மாணவர்களுக்கான அவசர சந்திப்பு ஒன்று இன்று காலை 10 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## மத்திய கல்லூரி அதிபரின் அழைப்பு

யாழ்.மத்திய கல்லூரியின் லியோக் கழகம், இன்டறக் கழகம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவைக் கழகம், மாணவர் முதல்வர் சபை ஆகியவற்றின் உறுப்பினர்களையும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்களையும் இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னதாகக் கல்லூரி [illegible] தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ)

## செஞ்சிலுவை தொண்டருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முதலுதவிப் பயிற்சி, தேவைகளை இனங்காணல், பயிற்சி, அனர்த்தங்களுக்கான முன் ஆயத்தங்கள் செய்தல் பயிற்சி, நிவாரணம் கொடுப்பதற்கான பயிற்சி, ஆரம்ப சுகாதாரப் பயிற்சி ஆகிய துறைகளில் பயிற்சிபெற்ற தொண்டர்களை சங்கத்தின் யாழ்மாவட்டக் கிளைக்கு இன்று காலை சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## நிவாரண உதவிகளை ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.28

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் இலங்கை வங்கி ஊழியர் சங்க மக்கள் வங்கிக் கிளையின் தற்போதைய இளைப்பாறிய உறுப்பினர்கள் தமது நிவாரண உதவிகளை சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர் துரகு, பிராந்தியத் தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னப்பிள்ளை கார்த்திகேசு



வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை கார்த்திகேசு 27.12.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தபால் உத்தியோகத்தர் கந்தையா கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் வல்லிபுரம் - பாறுப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும் கந்தையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ஸ்ரீமோகன் ([illegible]றைச் சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), [illegible]பா தரன், குகேதினி ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரத்தினம், பரமேஸ்வரி (தாதி உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), நாகேந்திரன், பாக்கியலீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொற்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளம்போக்கட்டி,*
*கொடிகாமம்.*
*T.P. No: 0777169173* (40185)(29-11-14)

தகவல்:
கா.ஸ்ரீமோகன்
(சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்).

## இராசதுரை தயாபரன்

**(பகுதிநேர விரிவுரையாளர், யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி),**

மல்லாகம் காளிகோயிலடியைச் சேர்ந்த இராசதுரை தயாபரன் அவர்கள் 26.12.2004 அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் புனிதவதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் தயாபதி (**N.D.E.** முதலாம் வருட மாணவி), தயாரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரு.திருமதி முத்துக்கிருஷ்ணர் (மாயவர்), திரு.திருமதி முருகேசு ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான அற்புததேவன் (மாயவர்), சிவகுமாரன், பரமானந்தன் மற்றும் இரத்தினம்மா தர்மபூபதி ஆகியோரின் மருமகனும் சுப்பிரமணியம், பஞ்சலிங்கம், யோகேஸ்வரி, தெய்வானைப்பிள்ளை, பூரணச்சந்திரா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, இறுதி அஞ்சலியின் பின்னர் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு நண்பகல் 12 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்லாகம்.* (சி-40074)(29-11-14)

தகவல்:
புனிதவதி (தாயார்).

## விமலநாதன் தர்ஸன்

கடவைப்புலம் சுன்னாகத்தைச் சேர்ந்த விமலநாதன் தர்ஸன் அவர்கள் 26.12.2004 அன்று அகாலமரணமானார்.

அன்னார் விமலநாதன் - லோகேஸ்வரி தம்பதிகளின் ஏகபுத்திரனும் கோபிகா, விஷ்ணுகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வச்சந்திரன், ஜமுனா ஆகியோரின் பெறாமகனும் முத்துக்கிருஷ்ணர் (மாயவர்), திரு.திருமதி பொன்னுத்துரை ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற அற்புததேவன், பரமானந்தம் (ஆனந்தன), சிவகுமாரன் ஆகியோரின் மருமகனும் தெய்வானைப்பிள்ளை, பூரணச்சந்திரா, புனிதவதி, நகுலேஸ்வரன், காலஞ்சென்றவர்களான ராம்குமார், இராசதுரை ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலியின் பின்னர் இறுதிக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு முற்பகல் 11 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கடவைப்புலம்,*
*சுன்னாகம்.* (சி-40075)(29-11-14)

தகவல்:
பொ.விமலநாதன் (தகப்பனார்).

## செல்வி தனுசியா கொன்சன்தைன்

**(யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி, உள்ளகப் பயிற்சி ஆசிரியை, தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்)**

மாமுனை, செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் வல்லிபுரம் பரியாரி ஒழுங்கை, அரசடி லேன், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று (28.12.2004) செவ்வாய்க்கிழமை கருகம்பன் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி லேன்,*
*பருத்தித்துறை.* (சி-40089)(29-11-14)

தகவல்:
தாய், தந்தை, சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிப்புற்றோருக்கு உதவுவதற்கு தயாராகின்றது சர்வதேச சமூகம்

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்கும் பல்வேறு உலக நாடுகள் முன்வந்திருக்கின்றன.

முன்னதாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு விசேட வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்த அரசு, முடிந்தளவு உதவிகளைத் துரித கதியில் வழங்குமாறு கோரியிருந்தது.

இதனையடுத்து அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், சீனா, பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான், சுவிற்ஸர்லாந்து, கனடா உட்பட பல நாடுகள் இதற்கான உடனடி பிரதிபலிப்பை வெளிப்படுத்தியுள்ளன. அதேபோல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளின் மருத்துவ நிபுணர்கள் கொழும்புக்கு விரைந்திருக்கின்றனர் என கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சு அறிவித்தது.

நோர்வே 16 கோடி ரூபாவும் ஐரோப்பிய ஒன்றியம் 40 லட்சம் யூரோ நாணயத்தையும் வழங்கமுன்வந்துள்ளன.

இந்தியா 4 கப்பல்களில் உணவுப்பொருள்களை அனுப்பிவைத்துள்ளது.

இதனைத் தவிர மீட்புப் பணிகளுக்காக 6 கடற்படைக் கப்பல்களையும் 6 ஹெலிகொப்டர்களையும் அனுப்பிவைத்துள்ளது.

ஐ.நாவும் உதவிக்குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளது. செஞ்சிலுவைச் சங்கக்குழுவும் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு 75 லட்சம் சுவிஸ் பிராங் உதவிகளை வழங்கவுள்ளது.

### ஜப்பான் உதவி

இதேவேளை- இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜப்பான் நாடாளுமன்ற வெளிவிவகார செயலர் கெய்ஷிரோ புக்குஷிமா நேற்றுக்காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

உடனடி நிவாரணங்களை வழங்கவும் விசேட மருத்துவக் குழுக்களை அனுப்பவும் ஜப்பானிய அரசு தீர்மானித்திருப்பதாக அவர் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்திருக்கிறார். இதன்பிரகாரம் மருத்துவர்கள், தாதிமார் உட்பட 20 பேரடங்கிய மருத்துவ நிபுணர்குழு நேற்று மாலை கொழும்புவர ஏற்பாடாகியிருந்தது.

அதேபோல் தேவையானளவு மருத்துவப் பொருள்கள், கூடாரங்கள், குடிதண்ணீர் போன்றவையும் பெருமளவில் கொண்டுவரப்படவுள்ளன. ஏனைய நிவாரணப் பொருள்களும் விரைவில் வந்துசேரவுள்ளன.

### சீனாவின் உதவி

இதேவேளை, உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீனா சென்றிருக்கும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இலங்கையின் நிலைமை குறித்து சீனத் தலைவர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

இதனையடுத்து இலங்கைக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்குவதற்கு சீன அரசு தீர்மானித்துள்ளதுடன் அதனைத் துரித கதியில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

### ஐக்கிய அரபு இராச்சியம்

அரசின் நிவாரண நடவடிக்கைகளுக்காக ஐக்கிய அரபு இராச்சியத்தின் மூலம் ஒரு லட்சம் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன தேவைப்படும் மேலதிக உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதரகம் அரசுக்கு அறிவித்திருக்கிறது.

இதேபோல் ரஷ்யாவிலிருந்து விசேட ஹெலிக்கொப்டர்களை வரவழைத்து மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தவும் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (எ-க)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டில் இடம்பெற்ற பேரனர்த்தத்தை அடுத்து தமது இருவாரகால பயணத்தை ரத்துச்செய்துவிட்டு நேற்று மாலை நாடு திரும்பினார்.

நேற்றுமாலை ஜனாதிபதி சந்திரிகா அவசர அமைச்சரவைக் கூட்டத்தையும் ஆளுங்கட்சியின் குழுக்கூட்டத்தையும் நடத்தியிருக்கின்றார். (எ-க)

## உயிரிழந்தோரின் இறுதிக்கிரியைகளுக்கு தலா 10 ஆயிரம் முதற்கட்டமாகக் கொடுப்பனவு

கடற்கொந்தளிப்பின் காரணமாக ஏற்பட்ட அனர்த்தத்தின் விளைவாக உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியை செலவுகளுக்காகத் தலா 10 ஆயிரம் ரூபாவை முதற்கட்டமாக வழங்குவதற்கும் இதன் பின்னர் முழுமையான நட்டஈட்டுத் தொகையொன்றை வழங்குவதற்கும் நேற்று கொழும்பில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தக் கூட்டம் அலரி மாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

அமைச்சர்களான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, தினேஷ் குணவர்த்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜயசூரிய, விமல் வீரவன்ஸ, வண.அத்துரெலியே ரத்னதேரர் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (எ-க-12)

## ஆயிரத்திற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுங்கியபடி உள்ளன. இந்தச் சடலங்களை மீட்கமுடியாத நிலை காணப்படுகின்றது. சடலங்கள் அழுகிய நிலையில் உள்ளதால் இனங்கான முடியாதுள்ளது. உரிமைகோர , உறவினர்கள் எவருமே இல்லை. இதனால் மீட்கப்பட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட சடலங்கள் இன்று (திங்கட்கிழமை) புகைப்படம் எடுக்கப்பட்ட பின் புதைக்கப்பட்டன.

இவ்வாறானஅனர்த்தம் மீண்டும் ஏற்படும் என அஞ்சுவதால் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பத் தயங்குகின்றனர்.

இன்னும் பல கிராமங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியாதுள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 14 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

- இவ்வாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-173)

## கிழக்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வணிகர் கழகங்கள், மாணவர் அமைப்புகள் இணைந்து இந்தப் பொருள் களைச் சேகரித்திருந்தன.

இதற்கிடையில் - இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கென நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு அருகில் புனர்வாழ்வுக் கருமபீடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்தக் கருமபீடம் ஊடாக மாவட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு மூன்று நேர உணவுகள் மற்றும் இதர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. (எ)

## கடல் மட்டம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடல் அலையின் வேகத்தின் 25 வீதமான வேகத்துடன் நேற்றைய கடல் அலை இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டக் கரையில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் மக்கள் சென்று பாடசாலைகள், ஆலயங்களில் தங்கியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நாச்சிக்குடா, பூநகர், வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, பாப்பாமோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து புத்தளம், அநுராதபுரம், மடு, விடத்தல்தீவு, மதவாச்சி ஆகிய பகுதிகளுக்குச் செல்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசக் கடற்பகுதியில் கடலடிப்பு அதிகரித்துள்ளதால் அச்சம் அடைந்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிக்கும் பணியை தமிழர் புனர்வாழ்வுக்கழகம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை, தமிழீழக் காவல்துறை ஆகியன முழு வீச்சில் மேற்கொண்டுள்ளன. (எ-3-232-353)

## உயிரிழந்தோரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை கணக்கிடப்பட்டது என்றும் -

தொடர்ந்து மீட்புப் பணிகள் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் - அவர் தெரிவித்தார்.

மீட்கப்படும் சடலங்களை உறவினர்களின் அஞ்சலியின் பின் புதைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியில் ஐயங்கோயிலடிக்குப் பக்கத்தில் 750 சடலங்களைப் புதைக்க புதைகுழிகள் வெட்டப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 250 பேரின் சடலங்கள் நேற்றுப் புதைக்கப்பட்டன என பொறுப்பாளர் சின்னவன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்த தகவல் தருகையில், பாதிக்கப்பட்டவர்களுக்கான அரச உதவிகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் கூறினார். (எ-க-3-352-402-353-405)

## சட லங்களை மீட்பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதைக்கப்பட்டு வருகின்றன.

கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த பெரும்பாலான குடும்பங்களில் எவருமே உயிர் தப்பாமல் அனைவருமே இயற்கையின் சீற்றத்திற்குப் பலியாகியுள்ளனர். இதனால் வைத்தியசாலைகளில் உள்ள அவர்களது சடலங்களைப் பொறுப்பேற்க எவருமே இல்லாத நிலைகாணப்படுகின்றது. இதனால் அநாதரவான நிலையில் நூற்றுக்கணக்கான சடலங்கள் காணப்படுகின்றன.

பல பிரதேசங்களில் தொடர்ந்தும் சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன.மேலும் சில இடங்களில் சடலங்கள் கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பல பிரதேசங்களில் மீட்புப்பணிகளை மேற்கொள்ளமுடியாத அளவுக்குத் தொடர்ந்தும் கடல் நீர் தேங்கிநிற்கின்றது. மீட்புப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதே நீர்மட்டம் உயர்ந்து செல்வதாகவும் மீட்புப்பணியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

காயமடைந்த ஆயிரக்கணக்கான மக்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியாத அளவுக்கு வைத்தியர்களுக்கும், சுகாதாரப்பணியாளர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதால் பணியில் இருப்போர் திண்டாடுவதையும் அவதானிக்க முடிகின்றது.

பல இடங்களிலும் வழமையான அரசு நிர்வாகம் முற்றாகச் சீர்குலைந்துள்ளது. அனைத்து அதிகாரிகளும், தமது அலுவலகக் கடமைகளை இடை நிறுத்திவிட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர்.

கிழக்கில் பாதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த தமிழ் - முஸ்லிம் இளைஞர்கள் நிறுவன ரீதியாக ஒன்று சேர்ந்து நிவாரணப் பொருள்களைத் தத்தமது பகுதிகளில் சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொண்டுசென்று வழங்கி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் சீர்குலைந்துள்ளதால் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பெரும்பாலான பிரதேசங்களில் மின்சாரம், தொலைபேசி சேவைகள் துண்டிக்கபபட்டுள்ளன. இவ்வாறான பிரதேச மக்களுக்கு வெளியிடங்களுடனான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

பல கரையோரப் பிரதேசங்களில் வீதிகளில் மரங்களும், மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கம்பங்களும் சாய்ந்து வீழ்ந்து காணப்படுவதால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. போக்குவரத்துத் துண்டிக்கப்படுவதால் பொருள்களுக்கு அன்றாடம் விலை அதிகரித்துக்கொண்டு செல்கிறது. எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நீண்ட வரிசை காணப்படுகின்றது.

கடல் நீர் வடிவிலே எமன் வருவதால் கடலுக்கு மீனவர்கள் எவரும் செல்லவில்லை. இதனால் மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இறைச்சிக்கடைகளில் நீண்ட வரிசை காணப்படுகின்றது.

பெரும்பாலும் மீனவக் குடும்பங்களே இந்த அனர்த்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

லட்சக்கணக்கான மக்கள் தொடர்ந்தும் அகதிகளாக இடம்பெயர்ந்து வருகின்றனர். இவர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்க முடியாமல் அதிகாரிகள் திண்டாடி வருகின்றனர். பொது அமைப்புக்கள் சமைத்த உணவுப் பார்சல்களையும் உடுபுடைவைகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாண கரையோரப் பிரதேச வீடுகளில் மரண ஓலம் ஓங்கி ஒலிக்கின்றது. உடன்பிறப்புக்களையும் தாய்தந்தையர்களையும் பெற்ற பிள்ளைகளையும் இயற்கையின் சீற்றத்திற்குப் பலிகொடுத்த சோகம் தாழாது மக்கள் கதறி அழுத வண்ணமே உள்ளனர். பெரும்பாலான வீடுகள் மரண வீடுகளாகவே உள்ளன.

பொலீஸ் மற்றும் பாதுகாப்புப் படையினர், அரச அலுவலர்கள் அனைவரினதும் விடுமுறைகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதால் அனைத்து உத்தியோகத்தர்களும் மக்களுக்கான நிவாரணப் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

இயற்கையின் சீற்றம் இன. மத. குல. வேறுபாடுகள் எதுவும் இன்றி அனைவரையுமே அடித்துச் சென்றுள்தால் நிவாரணப் பணிகளிலும் ஆங்காங்கே இன ஐக்கியத்தைக் காணக் கூடியதாக உள்ளது. (ஏ-க-12)

## 15,000 பேர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானிகள் அறிவித்துள்ளனர். இதனால் கரையோரப் பிரதேசங்களில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுகின்றது. மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கிழக்குக் கரையோரத்தை முதல் பேரலை தாக்கியது. தொடர்ந்து பல அலைகளின் தாக்கமும் உணரப்பட்டது. நேற்றும் சில அதிர்வுகள் கிழக்கில் உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

'துறைமுக அலை' என்ற அர்த்தம் கொண்ட இந்த சுனாமி கடற்கொந்தளிப்பு கரையோரப் பிரதேசத்தை ஈவுஇரக்கமின்றித் தாக்கியதில் இலங்கையில் வரலாறு காணாத மனிதப் பேரவலம் ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள், மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் என்ற ரீதியில் அதிகரித்து வருகின்றது.

நேற்றிரவு வரை 13 ஆயிரத்து 390 பேர் வரையிலானோர் உயிரிழந்துள்ளனர் என்று கணக்கிடப்பட்டது. மேலும் பலரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. காணாமற்போனவர்களில் மீட்கப்பட்டவர்கள் மற்றும் மீண்டவர்கள் தவிர ஏனையவர்கள் உயிருடன் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் பெரியளவில் இல்லை என்றே அதிகாரிகள் கூறுகின்றனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யும் பணிகள் நேற்று முழுவீச்சில் இடம்பெற்றன. சடங்குகளோ கிரியைகளோ செய்வதற்கு நேரமோ வசதியோ இல்லை என்பதால் பல நூற்றுக்கணக்கான சடலங்கள் உறவினர்களின் அஞ்சலிக்குப் பின்னர் அடக்கம் செய்யப்பட்டன. பல இடங்களில் நூற்றுக்கணக்கான சடலங்கள் ஒன்றாகவே அடக்கம் செய்யப்பட்டன.

பெருக்கெடுத்த கடல் அலை கரையோரக் கிராமங்களை அள்ளிச் சென்றதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே உயிரிழந்த பரிதாபங்களும் இடம்பெற்றுள்ளன. இதனால் வைத்தியசாலைகளில் பல சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் கிடக்கின்றன. அவற்றைத் தொண்டு அமைப்புக்களும் மீட்புப் பணியாளர்களும் அடக்கம் செய்துவருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் போதியளவில் சென்று சேர்வதிலும் சிக்கல்கள் எதிர்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்றுவரை அரச உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அரசசார்பற்ற அமைப்புக்களும் விடுதலைப் புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இந்த நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன. சில இடங்களில் அரச அலுவலகங்களும் கடற்கொந்தளிப்பால் சேதமடைந்துள்ளன.

பெரும் எடுப்பில் மீட்புப் பணி மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் இழப்புக்கள் மேலும் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

உறவுகளையும் உடைமைகளையும் வாழ்விடங்களையும் இழந்து உதவிகளும் இன்றி நிர்க்கதியாகத் தவிக்கும் மக்களுக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாத நிலையில் வடக்கு - கிழக்கு எங்கும் சோகமயமாகக் காணப்படுகின்றது. வன்னியில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

நேற்றுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,600 பேரும் வடமராட்சி கிழக்கில் 2,000 பேரும் வடமராட்சியில் 100 பேரும் மட்டக்களப் பில் 1,200 பேரும் திருகோணமலையில் 800 பேரும் தெற்குக் கரையோரப் பிரதேசங்களில் 3,000 இற்கும் அதிகமானவர்களும் அம்பாறையில் 1,500 இற்கும் அதிகமானவர்களும் உயிரிழந்துள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 2,000 பேர் வரையிலானோர் காணாமற்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. முல்லைத்தீவில் 6,000 பேர் வரையிலானோரைக் காணவில்லை என்று கூறப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து கிராமங்கள் முற்று முழுதாக அழிந்துள்ளன. தெற்கு மாவட்டங்களில் 10,000 பேர் வரையிலானோரைக் காணவில்லை என்றும் கூறப் படுகின்றது.

மட்டக்களப்பு, பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை பிரதான வீதிகள் என்பன சேதமடைந்துள்ளன. இதனால் இந்த மாவட்டங்களுக்கான போக்குவரத்துக்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ-க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org